விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 02 வெள்ளிக்கிழமை (15.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 117

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

## சர்வதேச நாடுகள் கடுமையான அழுத்தம்

# ஜனாதிபதி நாடு திரும்பியதும் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்து

## சமாதானச் செயலகப் பணிப்பாளர் நம்பிக்கை

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான சுனாமி அனர்த்த மீள் கட்டமைப்புத் தொடர்பிலான பொதுக்கட்டமைப்பு அடுத்த வாரம் கைச்சாத்தாகலாம் என அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.**

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பியதும் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாகும் எனவும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பிலான கருத்துப் பகிர்வுகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த 230 பேர் நேற்று ஆஸ்பத்திரியில் அனுமதி

(கொழும்பு)

பல்வேறு விபத்துச் சம்பவங்கள் காரணமாக காயமடைந்த 230 பேர் கடந்த 24 மணிநேரத்தில் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை (12 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரி ஆசிரியர் வெற்றிடத்திற்கு இறுதிவருட மாணவரும் விண்ணப்பிக்க வசதி

### கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன், வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் வி.பி. பாலசிங்கத்தை சந்தித்துக் கலந்துரையாடியதையடுத்தே இவ் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இறுதிவருட கற்கை நெறியினை (12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் எதற்கு? அரசியல் எதிரிகளை பழிவாங்கவா?

### ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசரகாலச் சட்டம் அவசியமில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம், கூடுதலான சந்தர்ப்பங்களில் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதாக சோமவன்ச தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட காலிப் பிரதேசத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின்போதே சோமவன்ச அமரசிங்க இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியின் எதிர்விளைவு மலைகள் குமுறும் அபாயம்

### பேராதனைப் பேராசிரியர் எச்சரிக்கை

(கண்டி)

சுனாமிப் பேரலையினையடுத்து ஏற்பட்ட ...

...ளது.

இதன் காரணமாக மலைத் தொடர்

## அடுத்த மாத இறுதிவரை தொடர்ந்து மழை பெய்யும்

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதி ... நெறியிலின் ... (12 ஆம் ...

# சுனாமியின் எதிர்விளைவு மலைகள் குமுறும் அபாயம்

## பேராதனைப் பேராசிரியர் எச்சரிக்கை

(கண்டி)

சுனாமிப் பேரலையினையடுத்து ஏற்பட்ட புவி நடுக்கங்களினால் உலகின் புவியியல் அமைப்புக்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழக புவியியல்துறைப் பேராசிரியர் சி.வி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற பூமியதிர்வு காரணமாக புவியின் மேற்பரப்பு பெரும் அதிர்வுக்குள்ளாகியுள்ளது.

இதன் காரணமாக மலைத் தொடர்களின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பல எரிமலைகள் செயற்படும் தன்மையை பெற்றுள்ளது. நீரின் தன்மையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மண் சரிவுகள் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

(ச)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட காலிப் பிரதேசத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின்போதே சோமவன்ச அமரசிங்க இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த மாத இறுதிவரை தொடர்ந்து மழை பெய்யும்

## வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

நாட்டில் அடுத்த மாத இறுதிவரை மழை தொடர்ந்து பெய்யுமென கொழும்பு வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பருவப் பெயர்ச்சி காற்றுகளுக்கிடையிலான மாற்றங்கள் காரணமாகவே இடியுடன் கூடிய மழை தொடர்ந்து பெய்யுமென திணைக்களம் தெரிவித்தது.

இன்று மாலை ஊவா, மத்திய, சப்ரகமுவ, வடமத்திய, வடமேல் மாகாணங்களில் இடியுடன்கூடிய (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சி குறித்து அறிவூட்ட பிரசார நடவடிக்கை

சமாதான முயற்சி குறித்து மக்களுக்கு அறிவூட்டும் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் பணிப்பிற்கமைய இப் பிரசார நடவடிக்கை எதிர்வரும் 23 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடைக்கால நிர்வாக யோசனை உட்பட சமாதான முயற்சிகளுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்கள் பற்றியும் மக்களுக்கு விரிவாக அறிவூட்டப்படவுள்ளதுடன் இது சம்பந்தமான விடயங்களை செயற்படுத்துவதற்காக ஜனாதிபதியினால் விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

டிலான் பெரேரா, மகிந்தானந்த அலுத் கமகே, ரி.பீ. ஏக்கநாயக்க ஆகிய பிரதியமைச்சர்கள் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். சமாதான நடவடிக்கைகள் குறித்து பிரசாரம் செய்யும் அமைப்பின் தலைமைப் பதவிப் பேராசிரியர் காமினி கீரவல்லவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(த)

# உயர்தரப் பரீட்சை ஜூன் 6 இல் ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதுவித காரணங்களுக்காகவும் ஒத்திவைக்கப்படமாட்டாது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படும் என்று வதந்திகள் பரவுவது குறித்து கருத்து தெரிவித்த பரீட்சைகள் திணைக்கள வட்டாரங்கள் உயர்தரப் பரீட்சைக்கான கால அட்டவணை தற்போது வெளியிடப்பட்டிருக்கின்றன.

இதற்கமைய ஜூன் மாதம் 6 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் முதலாம் திகதிவரை உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும்.

இதில் எந்தவித மாற்றங்களும் செய்யப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளது.

(த்-04)




யாழ் கொழும்பு

EXPOAIR

your friend in the skies...

தினசரி விமான சேவை

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

T.P: 021 222 3891/6297, 0772 348888, 0772 349999

E-Mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

# பொலிஸார் விசாரணைகளை நடத்த தொழில்நுட்ப வசதி, பயிற்சி தேவை

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் போது பொலிஸார் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக கூறப்படுகின்றது.

இதற்கு பொலிஸாருக்கு தேவையான தொழில்நுட்ப வசதி மற் றும் நவீன யுகத்திற்கு ஏற்ப விஞ்ஞான ரீதியான பயிற்சிகள் இல்லாது இருப்பதே காரணமென அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு இந்த விடயங்களை அரசிற்கு அறிவித்துள்ளது.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்து வது எவ்வாறு என்பது குறித்து ஆராய்ந்த இந்தக்குழு தனது யோசனைகளையும் சிபார்சுகளையும் நீதியமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது.

நவீன விஞ்ஞான யுகத்திற்கேற்ப குற்றப்புலனாய்வு விசாரணைகளை நடத்துவதற்கு தொழில்நுட்ப உபகரண வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அந்த அறிக்கையில் சிபார்சு செய்யப்பட டுள்ளது. (க-9)

# வீடுகள் கையளிப்பு

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிப்புற்ற வடம ராட்சியைச் சேர்ந்த 15 குடும பங்களுக்கு அறவழிப் போராட்டக்குழு அரை நிரந்தர வீடுகளை நேற்று முன்தினம் கையளித்தது

இந்நிகழ்வில், தமிழீழ விடுதலைப்புலிகளின் அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டுக்குழுவின் பொறுப்பாளர் பாலையா, அற வழிப் போராட்டக் குழுவின் பிரதிநிதி என்.கே.ஜீவதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்

இந்நிகழ்வின் போது பாதிப் புற்ற மக்களுக்கு வானொலிப் பெட் டிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பனவும் வழங்கப்பட்டன. (க-43)

# சட்டத்துக்கு முரணாக இடமாற்றம்; மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் மீண்டும் ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு

(புங்குடுதீவு)

சட்டத்திற்கு முரணானது என மனித உரிமை ஆணைக்குழுவால் இனங்காணப்பட்ட மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் நால்வரது இடமாற்றங்களை ரத்துச் செய்யுமாறு மனித உரிமைகள் ஆணைக் குழு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்ததையடுத்து அந்த இடமாற்றங்களை ரத்துச் செய்யுமாறு வலயக் கல்விப்பணிப்பாளருக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிப்புகளை வழங்கிய போதிலும் அவை ரத்துச் செய்யப்படாததால் மேற் குறித்த ஆசிரியர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மீண்டும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரியிடம் விசாரித்த போது ஏற்கனவே இந்த விசாரணையில் கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளரின் கடிதம்கிடைத்தவுடன் இட மாற்றங்களை ரத்துச் செய்வதாகக் குறிப்பிட்டி ருந்தும், இதுவரை அவ்விதம் செய்யாததால், அது குறித்து விசாரணை நடத்தப்பட வுள்ள தாகத் தெரிவித்துள்ளாரெனத் தெரிகிறது. (து-126)

# 40 கிராமங்களை புனரமைக்க த.புனர்வாழ்வுக்கழகம் இணக்கம்

(துன்னாலை)

சுனாமியின் பின்னர் வடகிழக்கில் கிராம மீள் குடியேற்றத்திட்டமிடலை மேற்கொள்வதற்காக வடகிழக்கின் 8 மாவட்டங்களிலும் பணிபுரியும் தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த 9ஆம் திகதி முதல் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு கிளி.வெண்புறா பன் நோக்கு மண்டபத்தில் தமிழர்புனர் வாழ் வுக்கழகத்தில் நடுவப்பணியகத்தினரால் நடாத்தப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் தமிழர் புனர் வாழ்வுக்கழக நடுவப்பணியக திடமிடப்பணியாளர் வோறன்ஸ் கிறிஸ்ரியும் சமூக வலுவூட்டல் பணியாளர் அன்பரசனும் கலந்துகொண்டு பயிற்சியின் நோக்கம் பற்றியும் பணியாளர்கள் இவ்வேலைத்திட்டத்தில் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது பற்றியும் கூறி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்கள்.

இறுதி நாளான பயிற்சிப் பட்டறை நிகழ்வில் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

அதில் வடகிழக்கில் பாதிக்கப்பட்ட 40 கிராமங்கள் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தால் புனரமைப்பு செய்ய விருப்பதாகவும் முதறகட்ட நடவடிக்கையாக வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கான துரித அபிவிருத்தி வேலைத் திட்டம் மேற்கொள்ள விருப்பதாகவும் தெரிவித்தார். (து-113)

# வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் குறித்து புத்தளத்தில் இருநாள் கலந்துரையாடல்

(புத்தளம்)

வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் புத்தளத்தில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு, வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் றிஷாட் பதியுதீன் தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த வேப்பங்குளம், பிச்சவாணி குளம். பொற்கேணி அகத்தி முறிப்பு, பண்டாரவெளி, புதுவெளி,முசலி, சிலாவத்துறை, கொண்டச்சி, மறிச்சுக்கட்டி, கரடிக் குறி உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மீள் குடியேற ஆர்வம் கொண்டுள்ள மக்கள் இக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (ந-15)

# இராசி பலன்

15.04.2005
சித்திரை 02, வெள்ளிக்கிழமை
திருவாதிரை முன்னிரவு 7.06 மணிவரை
இராகுகாலம் 10.34 - 12.04 மணிவரை
சுபநேரம் 6.04 - 7.34 மணிவரை
சித்தம்

| | |
|---|---|
| மேடம் | கௌரவக் குறைவு, காரிய தாமதம், மனக்கவலை, உடல்நலக்குறைவு. |
| இடபம் | மனச்சஞ்சலம், வேலைச்சுமை, பூர்வ புண்ணிய கருமம், அபகீர்த்தி. |
| மிதுனம் | மாதர்நட்பு, போசன சுகம், முயற்சி கைகூடும், பிரயாண நன்மை. |
| கடகம் | மனோசங்கடம், ஆரோக்கியக்குறைவு, உறவினர் வெறுப்பு, காரியதாமதம். |
| சிங்கம் | வெகுமானம், சயனசுகம், மாதர்நட்பு, முயற்சி கைகூடும். |
| கன்னி | தனவிரயம், சிந்தனை மிகுதி, தொழில் நன்மை, அலைச்சல். |
| துலாம் | சிநேகிதர் சந்திப்பு, சயனசுகம், ஆனந்தம், நல்லமுயற்சி. |
| விருச்சிகம் | பிரயுத்தனம், இஷ்டசித்தி, நண்பர்கள் உதவி, பொருள்சேர்க்கை. |
| தனுசு | நிர்ப்பந்திக்கப்படுதல், வீண்பயம், உத்தியோக பலிதம், காரியதாமதம். |
| மகரம் | பொருள் விரயம், சரீரபீடை, திருடர்பயம், திடீர் நன்மை. |
| கும்பம் | அபூர்வ சந்திப்பு, களஸ்திரநன்மை, எடுத்த கருமங்கள்கைகூடும், தனலாபம். |
| மீனம் | தேகநலன், பகைவர் நேசம், தொழில் நன்மை, சுபநிகழ்வு. |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

-வளவன்

# 17 அதிகாரிகள் இடமாற்றம்

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸ் துறையில் 17அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் இந்த இடமாற்றம் அமுலுக்கு வருவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இவர்களில் 5பொலிஸ் அதிகாரிகள் ஒழுக்காற்று விசார ணைகளின் பின்னரும் ஏனையோர் தரப்படுத்தலுக்கு அமையவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறந்த சேவை ஒன்றினை வழங்கும் நோக்குடனேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (க-4)

# இரு வேறு விபத்துக்களில் மூவர் காயமடைந்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

நேறறு முன்தினம் மாலை நடைபெற்ற இருவேறு விபத்துக்களில் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை மானிப்பாய் சந்தைக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மினிபஸுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காயமடைந்தனர்.

இவ்விபத் தில் சங்கானையைச் சேர்ந்த சி.சுகந்தன் (வயது 23) க.சண்முகதாஸ் (வயது 52) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே போன்று நேற்று முன்தினம் மாலை நல்லூர் பிரதேசசபைக்கு முன்பாக வடபிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்து ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற உரும்பிராயைச் சேர்ந்த இ.நிருசா (வயது 25) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-19)

# இத்தாலி செல்ல முயன்ற 65 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்கு பயணம் செய்ய முற்பட்டு எகிப்தின் செங்கடல் பகுதியில் நிர்க்கதியான நிலையில் தத்தளித்த இலங்கையர்களில் மேலும் 65பேர் நேற்று முன்தினம் காலை நாடு திரும்பினர்

இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததும் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் அவர்களை பொறுப் பேற்று விசாரணைகளை நடத்தினர்.

தலா 4 முதல் 5இலட்சம் ரூபாவை செலுத்தி இத்தாலி நோக்கி பயணம் செய்தோரில் 73 பேர் கடந்த வெள்ளிக்கிழமை நாடு திரும்பியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

# தமிழ்ச்செல்வன் குழுவினர் வத்திக்கானுக்குப் பயணம்

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தென்னாபிரிக்காவின் போராட்ட வீரரும், நோபல் பரிசு பெற்றவருமான பேராயர் டெஸ்மன் டுட்டை சந்தித்துப் பேசியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் ஐந்து மணியளவில் இச்சந்திப்பு நடந்தது.

பேராயர் டெஸ்மன்டுட் தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களின் விடுதலைப்போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஒருவராவார்.

அத்துடன் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவராவார்.

இச்சந்திப்பின் போது தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழீழ விடுதலைப்போராட்டம், அதன் தற்போதைய நிலைமை, தற்போதுள்ள சமாதானச் சூழல், கடல்கோள் அனர்த்தம் அதன் மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் போன்றவை தொடர்பாகவும் விளக்கம் அளித்தார்.

பேராயர் டுட்டு 1990 களில் தமிழீழ மக்களை ஒடுக்கும் இலங்கை அரசிற்கு ஆயுத தளபாடங்கள் விற்பதை நிறுத்த வேண்டும் எனக் குரல் எழுப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்காவின் தேசியத் தலைவர் நெல்சன் மண்டேலா மொசாம்பிற்குச் சென்றுள்ளமையால் அவருடனான சந்திப்பு நடைபெறவில்லை.

தென்னாபிரிக்கா விஜயத்தை முடித்துக்கொண்ட தமிழீழ அரசியல் விவகாரக்குழுவினர் தற்போது வத்திக்கானுக்குச் சென்றுள்ளனர். (க)

# மண்கும்பான் கிளையைத் திறக்கக் கோரிக்கை

(புங்குடுதீவு)

மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இயங்கி வந்த வேலணை ப.நோ.கூ.சங்க மண்கும்பான் கிளை, அண்மையில் அங்கு நடைபெற்ற திருட்டுச் சம்பவத்தையடுத்து மூடப்பட்டதால் பாவனையாளர்களுக்கு பெரும் சிரமம்மேற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி கிளை மூடப்பட்டதால் அப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் நிவாரணம் பெறுவதற்கும் 15 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வங்களாவடிச் சந்திக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் வேலணை ப.நோ.கூ. சங்கத்துக்குரிய பழைய கட்டடத்தைப் புனரமைப்புச் செய்து அந்த இடத்தில் மேற்படி கிளையைத் திறக்க வேண்டுமென்றும் இவ் விடயத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் அக்கறை காட்ட வேண்டுமென்றும் இப் பிரதேச மக்கள் கோரியுள்ளார்கள்.(து.126)

# நிரந்தர கட்டடம் இல்லை

அராலி மேற்கு-புங்கங்குளி நல் ஒளி சனசமூக நிலையத்துக்கு நிரந்தர கட்டடம் அமைத்துத் தருமாறு பாராளுமன்ற உறுப்பி னர்களிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிலையம் மண் சுவர்களால் அமைக்கப்பட்டு கிடுகு கொண்டு கூரை வேயப்பட்டுள்ளது.

வருடா வருடம் கிடுகு வேய்ந்து பராமரிப்பதற்கு நிதி வளம் இல்லையெனத் தெரிவிக்கும் மக்கள், இந் நிலையம் அமைந்துள்ள நிலப்பரப்பு தாழ்ந்த பூமியாதலால் மழைகாலங்களில் மழை நீர் நிறைந்து நின்று சுவர்கள் பல தடவைகள் இடிந்து விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-49)

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் அரச அதிகாரிகள் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்

## ஐ.தே.க. எம்.பி. ராஜித சேனாரட்ண கவலை

(கொழும்பு)

ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தின் அடாவடித்தனமான நடவடிக்கை காரணமாக அரச சேவை அதிகாரிகள் அசாதாரண நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்று ஐக்கிய தேசிய கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரச சேவை அதிகாரிகளின் மேல் கட்டவிழ்ந்து விடப்பட்டுள்ள அரசாங்கத்தின் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்களால் குறித்த அதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் சமுதாயத்தில் இழிநிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதுடன் ஊடகங்களின் கடுமையான விமர்சனங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

இவர்களின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஒன்றேனும் இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை என்பதே உண்மை என டாக்டர் ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தற்போதைய அரசாங்கத்தின் எஞ்சிய காலப்பகுதியில் அரச ஊழியர்கள் தங்களைக் காப்பாற்றி கொள்வதற்கு செய்யவேண்டியது இவை மட்டுமே!

*சந்தேகத்திற்கு இடமான ஆவணங்களை, கையெழுத்தினை உறுதிப்படுத்தும் இடத்திற்கு அனுப்பிவைத்துவிடுதல்.

*மேற்படி ஆவணங்களை ஜனாதிபதி விசாரணை ஆனைக்குழுவிற்கு அனுப்பிவைத்துவிட்டு இருந்துவிடவேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அரசாங்கத்தின் சகல செயற்பாடுகளும் ஸ்தம்பித நிலையை அடைவதோடு நாடு பின்னோக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.

அரசியல் பழிவாங்கல் அடிப்படையில் சிரேஸ்ட அதிகாரிகளின் கௌரவத்தைப் பாதிக்கின்ற வகையிலான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் கையில் எடுத்துள்ள ஒரேயொரு ஆயுதம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆகும்.

கடந்த காலப்பகுதியில் இந்த அரசாங்கத்தினால் விமர்சிக்கப்பட்ட லோரன்ஸ் மாபியாவை விட மிக மோசமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

காதர் எம்.பி.க்கு எதிராகப பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவரின் கௌரவத்திற்கும், நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தியது.

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த முற்பட்டபோது ஜனாதிபதி விசாரணை கையைச் சுட்டுக்கொண்டது.

தற்போதைய அரசாங்கததின் அடாவடித்தனமான நடவடிக்கைகள் கல்வித்துறையிலும் காலடி எடுத்து வைத்துள்ளன.

நாட்டின் இரு பிரதான பௌத்த பாடசாலைகளின் அதிபர்களை எவ்வித காரணமுமின்றி அரசு பதவி நீக்கம் செய்துள்ளது.

இன்னமும் ஐந்து அதிபர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு தயாரான நிலையில் உள்ளதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளின் பிரதான நோக்கம் அரச பாடசாலைகளை தமக்கு ஏற்ற வகையில் நிர்வாகம் செய்து கொள்ள நடவடிக்கை எடுத்தலாகும்.

தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே ஆனால் இவர்கள் மீது எடுக்கபடவேண்டிய நடவடிக்கைகள் நியாயமாகச் சட்டபூர்வமாக எடுக்கப்பட வேண்டியதே.

அரசாங்கத்தின் இவ்வாறான அடாவடித்தனமான மாபியா நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து அரச ஊழியர்களும் ஒன்று திரளவேண்டும்.

இதற்கு நாட்டின் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி தனது முழுப் பங்களிப்பை நல்கும் இந்த மாபியா அரசாங்கத்தினர்ல் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகள் அனைத்தும் அடுத்து அமையப் போகின்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் மீண்டும் பரிசீலணைக்கு எடுக்கப்படும்.

அதுவரையில் அப்பாவி அரச ஊழியர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளை ஐ.தே.க. தொடர்ந்து வன்மையாகக் கண்டிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# கூட்டம்

(பொன்னாலை)

லங்கா சீமெந்து நிறுவனத்தின் 20ஆம் ஆண்டு பொதுக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு - இலங்கைச் சுற்றுலாச் சபைக் கேட்போர் கூடத்தில் மு.ப.11 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-49)

# மஹோற்சவம்

(பொன்னாலை)

ஏழாலை - அத்தியடி அருள்மிகு முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் மஹோற்சவம் நடைபெறவிருக்கின்றது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 24ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (க-49)

# கட்டாக்காலி நாய்களால் தொல்லை

கைதடி - முதியோர் இல்லவளாகப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அங்குள்ள முதியவர்கள் பல்வேறு வகையான அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களிடம் முதியவர்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (க-49)

# எதிர்வரும் ஞாயிறன்று எரிக் புத்தளத்துக்கு விஜயம்

(புத்தளம்)

நோர்வே நாட்டின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை புத்தளத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்,

சமூக ஆய்வுக்கான செயலகத்தின் அழைப்பின் போில் இங்கு வருகைதரும் எரிக் சொல்ஹெய்ம, வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் வாழும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரடியாகக கேட்டறிந்து கொள்வதுடன், இதன் மூலம் உள்ளூர் மக்கள் எதிர்நோக்கியுள்ள சவால்கள் குறிதது்ம் புத்தி ஜீவிகளுடன் கருத்துப் பறிமாற்றல்களைச் செய்யவுள்ளார்.

இந்தச் சந்திப்பு புத்தளம் மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

அதேவேளை அன்றைய தினம் மாலை புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள பொதுக் கூடடத்திலும் எரிக் சொல்ஹெய்ம் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-15)

# சுனாமி எச்சரிக்கை அறிவிப்பு தொடர்பான ஆணைக்குழுவின் விசாரணை 26இல் ஆரம்பம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்த எச்சரிக்கை குறித்து அரச அதிகாரிகள் முன்கூட்டியே அறிவித்தார்களா இல்லையா என்பது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி அணைக்குழு எதிர்வரும் 26 ஆம திகதி விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த விசாரணை ஆணைக்குழு பொதுமக்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற்று விசாரணைகளை நடாத்தவுள்ளது.

இந்த விசாரணை ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளான ஹெற்றயாப்பா மற்றும் குலதிலக ஆகியோர் விசாரணை நடாத்தவுள்ளனர்.

இவர்களுக்கு அரச சட்டத்தரணிகளான சில்வா, டி.குமாரரத்தினம் ஆகியோர் பக்கத்துணையாகச் செயற்படுவர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமிப் பேரலைகளினால் நாடு முழுவதிலும் சுமார் 40ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டதுடன், சொத்துக்களையும் இழந்தனர்.

அதேவேளை இந்தக் குழு வானிலை அவதான நிலையம், புவியியல் ஆராய்ச்சி நிலையம ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் பிரிவுப் பேராசிரியர்கள் ஆகியோரிடமும் இந்தக் குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

விசாரணைகளின் முடிவில் ஆணைக்குழு சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களைக் குறைபபதற்கான வழிமுறைகள் குறித்து சிபாசு அறிக்கையொன்றை ஜனாதிபதிக்குச் சமாப்பிக்கவுள்ளது. (ந-8)

## நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு

# இலங்கை, மாலைதீவு பிரஜைகளுக்கு அமெரிக்கா ஜூலை 8 வரை கால அவகாசம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை மாலைதீவு ஆகிய நாடுகளிலிருந்து வந்து சட்ட விரோதமாக அமெரிக்காவில் தங்கி இருப்போர் நாட்டைவிட்டு வெளியேற இப்போது அமெரிக்க அரசாங்கம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

விசா விதிமுறைகளை மீறியமைக்காக உடனடியாக நாட்டைவட்டு வெளியேறுமாறு அமெரிக்கா ஏற்கனவே இவர்களுக்கு உத்தரவிட்டிருந்தது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இவ்விரு நாடுகளும் மீள் கட்டமைப்புப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன.

இதைக் கருத்திற்கொண்டு அமெரிக்கா இப்போது மனிதாபிமான அடிப்படையில் இவர்களுக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

சட்டவிரோதமாக அமெரிக்காவில தங்கியுள்ள இலங்கையருககும், மாலைதீவு வாசிகளுக்கும் 2005ஆம் ஆண்டு ஜூலை 8ஆம திகதிவரை தொடர்ந்து தங்கியிருக்க அமெரிக்கா வாய்ப்பளித்துள்ளது.

அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களமும், குடியேற்ற சுங்க விதிமுறைகள் அமுல்படுத்தும் முகவர் நிறுவனமும் கூட்டாகக் கடந்தவார இறுதியில் இந்த அறிவித்தலை விடுத்துள்ளன.

அமெரிக்காவிற்கு விஜயம் செய்வோர் விசா விதிமுறைகளை மீறியிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாகக் குடியேற்ற சுங்க நடைமுறை அமுல்ப்படுத்தும் முகவர் நிறுவனத்தால் தத்தமது நாடுகளுக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படுவர்.

2004ஆம் ஆண்டு டிசெம்பரில் சுனாமியால் பாதிக்கபபட்ட நாடுகளிலிருந்து வந்தவர்கள் விடயத்தில் விசா நடை முறைகளுடன் குடியேற்றச் சுங்க நடைமுறை விதிகள் பின்பற்றப்படவில்லை.

பின்னர் இவ்வாறு தங்கியிருப்போர் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டுமென உத்தரவிடப்பட்டது. தற்போதைய அறிவித்தல் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்ட இலங்கையர்களும், மாலைதீவு வாசிகளும் 2005ஆம் ஆண்டு ஜூலை வரை தங்குவதற்கு குடியேற்ற வாசிகள் அமுல்படுத்தும் முகவர் நிறுவனம் கால அவகாசம் அளித்துள்ளது.

நாடடைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்ட அனைத்து இலங்கை, மாலைதீவு பிரஜைகளும் 2004ஆம் ஆண்டு 30ஆம் திகதி முதல் 90 நாட்கள்வரை மட்டுமே அமெரிககாவில் தொடந்து தங்கலாம் என முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்விரு நாடுகளிலும் மள்கட்டமைப்புப் பணிகள் தொடர்வதால் இக்கால எல்லை 2005ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்கத் தேவையில்லையென்றும் குடியேற்ற சுங்க விதிகளை அமுல்படுத்தும் முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது. (க)



## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக் கொள்ள

### நியூ சிற்றி ரேடர்ஸ்

135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (குளத்துக்கு முன்பாக)

T.P: 222 3226

அண்மையில், ஹொலண்டில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வுக் காட்சிகளைப் படத்தில் காணலாம்.

# பெண்களை வாட்டி வதைக்கும் பாலியல் பலாத்காரங்கள்

## பெண்களின் ஆடைகளும் நவீன சினிமாவும் தூண்டுகின்றன

'ஆணுக்குப் பெண் குறைவில்லை' என்ற பாரதியின் வார்த்தைகள் எல்லாத்துறைகளிலும் நிருபிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாலியல் ரீதியில் இழைக் கப்படும் கொடுமைகளில் இருந்து மட்டும் பெண்களுக்கு இன்னமும் விடிவு காலம் பிறக்க வில்லை. நாளுக்கு நாள் பெருகிவரும் இந்தச் சமூக அவஸ்தை கொஞ்சமல்ல.

### நளினியின் துயரம்

22 வயதான நளினிக்கு இளம் பருவத்திலிருந்தே வந்தது பாதிப்பு. 15 வயதுவரை ஒழுங்காக வளர்க்கப்பட்ட இப் பெண்ணை ஒரு நாள் பாடாய் படுத்திவிட்டான். பெரியதுரை என்னும பாவி. யாரும் இல்லாத நேரம் பார்த்து நளினியை அவன் பாலியல் பலாத்காரம் செய்து விட, இப்பொழுது அவள் ஒரு குழந்தைக்குத் தாய். மன நலம் பாதிக்கப்பட்ட மகளோடு சேர்ந்து இப்பொழுது அவள் குழந்தையையும் சுமக்கிறாள்.

### கலாவின் அவலம்

வயதுக்கு வந்து சில மாதங்களே ஆகியிருந்த நேரம், கலாவை வாட்டியது குடும்ப வறுமை வேறு வழியே இல்லாது சொந்தச் சகோதரியின் வீட்டிலேயே அடைக்கலமாகப் புகுந்தாள் கலா. வீட்டுக்குள்ளேயே ஆரம்பத்தது அக்காள் கணவரின் சேட்டைகள். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளித்த அந்த நாட்களை எண்ண இன்றைக்கும் கலங்குகிறாள் கலா.

### மஞ்சுளாவின் மனவேதனை

ஆசை ஆசையாகக் காதலித்த, ஆதரித்து வாழ்வு தருவதாக வாக்குக் கொடுத்து அப்படியே வயிற்றில் ஒரு குழந்தையையும் கொடுத்து விட்டுக் கம்பி நீட்டிய நம்பிக்கைத் துரோகக்காரனால் பாதிக்கப்பட்டவள் தான் தேவி குளம் மஞ்சுளா சின்னச் சிறு வயதிலேயே கைம் பெண்ணாக' இடையில் காதலித்தவனும் கைவிடப்பட்டு இப்பொழுது கைக்குழந்தையுடன் காவல் நிலையமே கதியென நடையாக நடக்கிறாள்.

### விஜயாவின் விதி

கலர் கலராகக் கனவுகள்; கண் நிறைய ஆசைகள் எப்படியாவது நடிகையாகி விடும் ஆவலோடு காஞ்சிபுரத்திலிருந்து கோடம்பாக்கம் வந்தாள் விஜயா. பெரிய நடிகை வாய்ப்பெல்லாம் கிடைக்காவிட்டாலும். அரைகுறையான துணை நடிகையாவதற்கே இவள் எதிர்கொண்ட பாலியல் பலாத்காரம் ஏராளம். சக நடிகர்கள் தொடங்கிஏஜண்டுகள் வரை பலருககும் பலியானாள் விஜயா. இப்பொழுது அப்பா அம்மா வீட்டுக்கும் போக முடியாமல், சொந்தக்காரர் வீட்டுக்கும் போக முடியாமல் நடுத்தெருவில் நிற்கிறாள் அவள்.

கிராமம் நகரம் என்று வித்தியாசம் இல்லாமல் பரவலாகப் பரவிக்கிடக்கும் பாலியல் வக்கிரகங் களுக்கு மெத்தப்படித்த பெண்கள் வேலைக்குச் செல்லும் இடங்களும் விதிவலக கல்ல. கம்பியு,ட்டர் மென் பொருள் நிறுவனங்களிலும். பயிற்சி நிலையங்களிலும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் ஏராளம்.

"நிமிர்ந்த நன் நடை
நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சா
நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்
இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ
தில்லை..."

எனப் பாரதி கண்ட கனவு பழங்கதையா? பகற்கனவா?

சென்னை மாநகரில் மட்டும 2003 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட பாலியல் கொடுமைப் புகார்கள் 924. அடுத்த ஆண்டில் இந்தகைய புகார்களின் எண்ணிக்கை 1081. காவல் துறையின் பதிவேடுகள் கூறும் தகவல் இது. மானத்துக்கு அஞ்சி மறைக்கப்பட்டவைக்கு கணக்கு இல்லை.

பணி செய்யும் இடங்களில், படிக்கப்போகும் பகுதிகள் வீட்டுக் குள்ளேயே எனப்பல வகைகளில் தலைவிரித்தாடுகிறது பாலியல் பலாத்காரம். இப்படி அரங்கேறும் பலாத்காரங்கள் அபலைப் பெண்களை விபச்சாரத்தில் கொண்டு போய்த தள்ளுகின்றன என்பது தான் கூடுதல் அதிர்ச்சி. இதை விடக் கூடுதலான அதிர்ச்சி இளம் பெண் களை ஆசைகாட்டி மயக்கும் பாலியல் நோயாளர்கள், தமக்கு அந்நோய் உள்ளது என்று தெரிந்தும் அபலைப் பெண்களையும் அந்நோய்க்கு உள்ளாக்குவது.

கிராமம்-நகரம், படித்தவர்கள் படிக்காதவர்கள் என்ற வேறுபாடெல்லாம் பாலியல் கொடுமைகளுக்கு இல்லை. வீட்டு வேலைக்குச் செல்லும் இடமாக இருந்தாலும் சரி, கௌரவமான க்ம்பியு,ட்டர் நிறுவனங்களாக இருந்தாலும் சரி பாலியல் தொந்தரவுகளுக்கு விதிவிலக்கு என்று எதுவும் கிடையாது. இதைப் போலவே பாலியல் பலாத்காரத்துக்கு வயது வித்தியாசமும் இல்லை. ஆறிலிருந்து அறுபது வரையான பெண்களுக்கு விதவிதமான வேதனைகள் இழைக்கப்பட்டாலும் அனேகமாக இத்தகைய கொடுமைகளுக்குப் பெரும் பாலும் ஆளாவது சிறுமிகள் தான் என்கின்றது ஆய்வு முடிவுகள்.

பாலியல் கொடுமைகளை எதிர் கொள்ளும் பெண்களுக்கு உடல் ரீதியான பாதிப்புகளை விட உழவியல் ாதியான பாதிப்புகள் தான் அதிகம். சிறு வயதில் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்கள திருமணத்தையே வெறுக்கும அளவுக்குப் பெண்களின் மன நிலையையே மாற்றிவிடுவதாக கூறுகின்றார்கள் நிபுணர்கள்.

சொந்த பந்தங்களினாலும் தெரிந்தவர்களாலும் பாலியல் கொடுமைக்கு ஆளான பெண்கள் நிலை இன்னும் மோசம்.

ஊர் தோறும் மகளிர் காவல் நிலையஙகள், மகளிருக்கென்று தனியாக நீதிமன்றங்கள், பெண்களுக்குப் பாதுகாப்பளிக்கப் புதுப்புதுச் சட்டங்கள், பெண் உரிமைக்குப் போர்க் கொடி தூக்க வீதிக்கு வீதி அமைப்புக்கள. இத்தனைக் கும் பிறகுப இன்னமும் ஓங்கியே நிற்கிறது பாலியல் கொடுமைகளின் எண்ணிக்கை. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இந்த சமூக அவலத்தைக் கட்டுப்படுத்த வழி இல்லையா?

### பாலியல் கொடுமைகளைத் தடுக்க...

காவல்துறை முக்கியமாக இத்தகைய வழக்குகள் குறித்து விசாரிப்பதிலும் குற்றவாளிகளைப் பிடிப்பதிலும் தண்டனை வாங்கித் தருவதிலும் தீவிரமாகச்செயற்படவேண்டும். இரண்டாவதாகப் பெற்றோர்களும் கல்விக் கூடங்களும் பெண்களை நெஞ்சுரம் கொண்டவர்களாக மாற்றுகிற வகையில் தற்காப்புக் கலைகளைப் பயிற்றுவித்து அவர்களை நெஞ்சுரம் கொண்டவர்களாக ஆக்க வேண்டும்.

மூன்றாவதாக, மாறிவருகின்ற சூழ்நிலையில் பாலியல் என்பது அடிப்படையில் தேவை யானது என்பதை உணர்நது அனைத்துப் பள்ளிகூடங்களிலும் பாலியல் கல்வி அளிக்க வேண்டும். இவற்றின் மூலம் பாலியல் கொடுமைகளை ஓரளவுக்காவது தடுக்க முடியும்.

வேரூன்றிக் கிடக்கும் பாலியல வக்கிரக் கொடுமைகளை முழுவதுமாக அகற்றுவது உடனடியாகச் சாத்தியமில்லை. ஆனால மெல்லமெல்ல இந்த அத்துமீறலை, அநாகரீகத்தை அழித்தொழிக்க வேண்டியது அவசியம். இப்படியே விட்டுவிட்டால் புரையோடிப் போய் ஒட்டு மொத்தச் சமூகத்துக்கும் பாலியல கொடுமைகளால் பாதிபபேற்படும் என்பதை மறுப்பதற்கு இல்லை.

### ஆண்களைச் சுண்டி இழுக்கும் பெண்களின் ஆடைகள்

பெணகள் தங்கள் கற்பைப் பாதுகாப்பதற்காகக் கைகளையும கூரிய நகஙகளையும் ஆயுதமாகப் பயன்படுத்தவேண்டுமெனக் காந்தியடிகளே கூறியுள்ளார்.

பாலியல் கொடுமைகள் ஏற்படுவதற்கான முழப் பழியையும் ஆண்கள் மீது சுமத்துவது கூடாது எனக் கூறுவாரும் உள். அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள், தற்போது நவீன நாகரீகப் பெண்கள், மினி, மைக்ரோமினி எனத்தொடைதெரிய, இடை தெரிய, வயிறு, மார்பு தெரிய அணியும் உடை. என்னைப்பார், என் அழகைப் பார் என ஆண்களைச் சுண்டியிழுக்கும் நடையுடை பாவனை என்பனவும் நல்லவன் மனதைக் கூட மாற்றுவனவாக உள்ளது என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

சீவிக் குழல் முடித்து, மல்லிகைச் சரம் சூட்டி நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டுடன் அழகிய சேலை அணிந்து செல்லும் பெண்களைக் கண்டால் அவர்களைக் கையெடுத்துக் கும்பிடவேண்டுமென்ற உணர்வு ஏற்படுமேயன்றி பாலியல் நினைவுகள் ஏற்படமாட்டா எனக் கூறுவதிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஒரு பெண்ணானவள தற்காத்து, தற்கொண்டான் பேணி, தகைசான்ற சொற்காத்து சோர்விலாமல் இருக்க வேண்டுமென வள்ளுவப் பெருந்தகையே வற்புறுத்திக் கூறியுள்ளார்.

### பாலியல் வக்கிரத்தைத் தூண்டும் நவீன சினிமாக்கள்

தறபோது வெளிவரும் திரைபடங்களும அவற்றில் இடம்பெறும் இரட்டை அர்த்தம் கொண்ட பாடலகளும் அநாகரீக ஆடை அணிகளும் பாலியல் வக்கிரகங்களை வளர்ப்பதில் பெரும் பங்கு ஆற்றுகின்றன.

முன்னொரு காலத்தில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிய படஙகளில் கதாநாயகன் நாயகியை தொடடனைத்து கட்டிப் புரண்ட காதல் புரியும் காட்சிகள் துளியும கிடையா. ஆனால் இப்பொழுது வெளிவரும் திரைப்படங்களின் காதல் காட்சிகள... எழுதவே கையைக் கூசவைப்பனவாக இருக்கின்றன. இதையும் பாலியல் கொடுமைகளுக்கு சமாதி கட்ட முனையும ஆர்வலர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

'அச்சமும் மடைமையும் இல்லாத
பெண்கள், அழகிய திரு நாட்டின்
கண்கள்' எனவும்,
'பெண்ணடிமை தீருமட்டும் பேசு
திருநாட்டில்,
மண்ணடிமை தீர்ந்து வருதல
முயற்கொம்பே'

எனவும் கவிஞர்கள் கண்ட கனவு பகற்கனவு தானோ?

**பொ. இராசதுரை**

---

# படையினரின் சந்திப்பில் அரச பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டும் - விடுதலைப் புலிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படை அதிகாரிகளுக்குமிடையில் இனிமேல் நடைபெறவிருககின்ற சந்திப்புகளின் போது அரச தரப்பு பிரதிநிதிகள் இருவர் சமூகமளிக்க வேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளினால் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கையொன்று முனவைசக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இரு தரப்புக்குமிடையில் ஏறகனவே நடைபெற்று வந்த இச் சந்திப்புகள் கடந்த மூன்று மாதஙகளுக்கு மேலாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

குறிப்பிட்ட புரிந்துணர்வு ரீதியிலான சந்திப்புக்களின் போது ஏற்படும் இணக்கப்பாடுகளை படைத்தரப்பு அமுல்படுத்த தவறி வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இதன் காரணமாக இப்படியான சந்திப்புக்களில் கலந்து கொள்வதில் அர்த்தமில்லை என அவர்கள் கருதுகின்றார்கள். இடைநிறுத்தப்பட்டுள்ள இச்சந்திபபை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகளில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு தற்போது ஈடுபட்டு வருகின்றது.

அண்மையில் மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்த போர் நிறுதத கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொகலண்ட இது தொடர்பாக இரு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை படைத்தரப்பு இப்படியான சந்திப்புக்களில் ஏற்படும் இணக்கப்பாடுகளை அமுல்படுத்துகின்றதா இல்லையா என்பதை அரசாங்கத் தரப்பு அறிந்து கொள்ள வேண்டும் எனவும்,

இதற்காகவே அரசாங்கத் தரப்பிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு பிரதிநிதிகளாவது இப்படியான சந்திப்புக்களில் கலந்துகொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (க)

---

# சுனாமியால் அடித்துச் செல்லப்பட்ட இராணுவத்தினரின் 545 வெடிபொருட்கள் மட்டக்களப்பில் கண்டெடுக்கப்பட்டு அழிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப் பேரலையின் போது ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் மற்றும் இராணுவ நிலைகளிலிருந்து மக்கள் நடமாட்ட பகுதிகளுக்குள் அடித்துச்செல்லப்பட்ட 545 வெடிபொருட்கள் இது வரை கண்டு பிடிக்கப்பட்டு செயழிக்கச் செய்யப்பட்டு ஆழிக் கப்பட்டதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வெளியிடப் பட்டுள்ள தகவலில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்ட பணிப்பாளர் கே.தேவராஜன் தெரிவிக்கையில்,

கல்லடி, மாங்கேணி, பாசிக்குடா, கல்குடா, காயான்கேணி ஆகிய இராணுவ முகாம்களை அண்டிய பிரதேசங்களிலும் கல்லாறு பொலிஸ் காவல நிலையத்தை அண்டிய பிரதேசததிலுமிருந்து இவை கண்டு பிடிக்கப் பட்டன.

இவற்றில் 344 மிதிவெடிகள் ஏனையவை கைக்குண்டு, துப்பாக்கி ரவைகள், மோட்டார்கள் போனற வெடிப்பொருட்களாகும்.

குறிபபிட்ட பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. ஏற்கனவே யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றும் பணிகளுக்கு புறம்பாக 'மைக்' நிறுவனத்துடன் இணைந்து இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் சுட்டிக் காட்டினார். (ற)

# கண்ணைக் குடையும் கறையான்கள்

சிறுகதை



M.சந்திரகலா
யோகபுரம்.

சோபா மேல் சாய்ந்தபடி ஏதோ சிந்தனை வயப்பட்டவராக நகத்தைக் கடித்துத் துப்பிக்கொண்டிருந்தார் ஷாமந்தி ரீச்சர். அவரது உள்ளம் நெருப்பென தகித்துக்கொண்டிருந்தது.

வாசலில் மோட்டார் பைக்கின் ஓசை கேட்டு நிமிர்த்த ரீச்சர் அசைவற்று அப்படியே இருந்தார். ஒருபோதும் இவ்வளவு ஆறுதலாயும் நிதானமாயும் ஷாமா ரீச்சர் இருந்ததைக் காணாத கைலாசத்துக்கு மனைவி இருந்தவிதம் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

''என்னப்பா, உடம்பு சரியில்லையே? உடுப்புக்கூட மாற்றாமல் இருக்கிறீர்...'' என கேள்விகளை தொடுத்தவண்ணம் மோட்டார் சைக்கிளை தள்ளிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார்.

கணவனின் கேள்வி மூளையில் உறைக்க,

''ஒண்டுமில்லை வாங்கோ...'' என கணவனை வரவேற்று உள்ளே போய் சேலையை மாற்றிக்கொண்டு தேனீர் கலக்க சமையலறைக்குள் நுழைந்தார்.

நாற்பத்தி ஆறு வயதானவர் ஷாமந்தி ரீச்சர். அவருடைய அழகிய தோற்றம் பார்ப்பவரை மீண்டும் பார்க்க வைக்கும். சாந்தமான குணம். எப்போதும் புன்முறுவலுடன் இருப்பதே அவரது அழகுக்கு இன்னும் அழகு சேர்த்தது.

அரச வங்கியில் வேலை பார்ப்பவர் கைலாசபதி என்கிற கைலாசம். அவரது வயது ஐம்பது. இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். ஆசைக்கு ஒண்டு ஆஸ்திக்கு ஒண்டு என ஒரு ஆணும் ஒரு பெண்ணும். மிகவும் அழகான குடும்பம்.

தேனீரைக் கலந்து கொண்டு கணவனிடம் வந்தார் ஷாமா ரீச்சர். கைலாசமும் கைகால் அலம்பிக்கொண்டு கதிரையில் வந்தமர்ந்தார். மனைவியிடம் தெரிந்த முகமாற்றம் அவருக்கு வியப்பை ஏற்படுத்திய போதும் அதற்கான காரணத்தை அவர் துருவித்துருவிக் கேட்க விரும்பாது ரேடியோவைத் திருப்பினார். அதில் புதிய பாடல் ஒன்று ஒலிபரப்பிக்கொண்டிருந்தது. பாடல் வரிகளில் ஆபாசம் அள்ளித் தெளிக்கப்பட்டிருந்தது.

''இஞ்சேருங்கோ, உதை முதலில் நிப்பாட்டுங்கோ. உதுகளாலைதான் எங்கட நாடு கெட்டு குட்டிச்சுவராய்ப் போகுது...'' என ஷாமா ரீச்சர் கணவன் மீது எரிந்துவிழுந்தார். யார் மீதோ உள்ள கோபத்தை கணவன் மீது காட்டினார்.

''என்னப்பா உமக்கு இண்டைக்கு என்ன நடந்தது?'' என ரேடியோவை நிப்பாட்டியபடி கைலாசம் கேட்க,

''எனக்கு என்ன நடந்தது... எல்லாம் எங்கட நாட்டில தலைகீழா நடக்குது. தெருவில நடக்க முடியேல்ல. நான் பள்ளிக்கூடம் முடிஞ்சு வந்துகொண்டிருந்தன். உந்த உரும்பிராய் சந்தி மூலையில் நிண்ட பொடியள் நாலைஞ்சு என்ன சொல்லிச்சினம் தெரியுமே...''

''என்னப்பா நீர் சொன்னால்தானே எனக்கு என்னெண்டு தெரியும்''

''அதை எப்படி வாயால சொல்லுறது? நாக்கு கூசுது. அதுகள் ஏன்ர உடம்பை வர்ணிச்ச விதமும் பாடின பாட்டும் சீச்சி... நினைக்கவே அருவெருப்பாய் இருக்குது. அதுவும் என்னட்டை படிச்சதுகள். பாலர் வகுப்பில அதுகளின்ர கையைப் பிடிச்சு எழுதப் பழக்கினனான். ஆனா அதுகள் இண்டைக்கு என்னையே எவ்வளவு கீழ்த்தரமா கதைச்சுதுகள். மேற்குப் பக்கம் வெய்யிலடிக்க குடையை அந்தப் பக்கமாகச் சரிச்சுப் பிடிச்சுக் கொண்டு வந்ததால என்ர முகத்தை அவை பார்க்கேல. கையில சிகரட் வேற எபபடியிருக்கும் எனக்கு..''

''நீர் என்ன பேசாமல் வந்தனீரே செருப்பைக் கழட்டி ஒண்டு குடுக்காமல்?'' என கைலாசம் கோபப்பட்டார்.

''என்ன செருப்பால அடிச்சா பிரச்சினை முடிஞ்சிடுமே? அவங்கள் திருப்பி எனக்கு ஒரு அடி அடிச்சால் என்ர நிலை என்ன...? பிறகு ஆசிரியர்மாரை யார் மதிப்பினம். குடையை சரிச்சு நான் அவங்களைப் பார்த்ததும் அவங்கள் பேயறைஞ்ச மாதிரியாயிட்டாங்கள். கிட்டப்போய் அவங்களோட கதைக்கவே எனக்கு வெக்கமாய் இருந்திச்சு. ஆனாலும் நான் கிட்டப்போய் ஒண்டு மட்டும் சொல்லிவிட்டு வந்தன்''

''என்ன சொன்னீர்?'' என கைலாசம் பொறுமை இழந்தார்.

''உங்கட அக்கா தங்கச்சி அம்மா எல்லாம் என்னை மாதிரித்தான் இருப்பினம் போய் வீட்டில கேக்கச் சொல்லி. வேற என்னத்தைச் சொல்லுறது. ஒரு ஆசிரியருக்குக்கூட எங்கட சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் இல்லையெண்டா பிறகு நாங்கள் மானமுள்ள தமிழர் என்று மார்தட்டி என்ன பிரயோசனம்....''

கைலாசம் கவலை தோய்ந்த முகத்துடன் ''என்னப்பா செய்யிறது எங்கட சமுதாயம் ஊனப்பட்டுப் போய் விட்டது. குடிவெறி சிகரெட் என்று படிக்கிற இபபத்தே பொடியள் அலையிதுகள். எட போட்டிருக்கிற சீருடைக்காவது மதிப்புக் குடுக்குதுகளே ஒண்டும் இல்ல. இதையெல்லாம் எங்கை போய் சொல்லுறது'' என மனைவியை சமாதானப்படுத்த முயன்றார்.

''என்ன எல்லாரும் இப்படியே சொல்லிக்கொண்டிருந்தால் அப்ப யார்தான் இதுகளை தட்டிக் கேக்கிறது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில தமிழர் பாரம் பரியங்கள் செத்துப் போச்சுது. தெருத்தெருவா பெடியன் பெட்டையள் சுத்துறதும் சந்திக்குச் சந்தி கூடி நிண்டு வம்பளக்கிறதும் பெட்டயளுக்கு சேட்டை விடுறதும் சர்வசாதாரணமாப் போச்சு. கேக்கிறதுக்கு ஆள் இல்லையெண்ட நினைப்பு'' என கைலாசம் வேதனைப்பட்டார்.

ஷாமா ரீச்சருக்கு கோபம் தலைக்கேறி கண்கள் கோவைப் பழமென சிவப்பானது. ''ஒரு ஆசிரியரான எனக்கே இந்த நிலையெண்டா சாதாரண பெண்கள் எப்படி இந்தக் கொடியவர்களால் கடித்துக் குதறப்படுவார்கள்? பெண்களுக்கு பாதுகாப்பே இல்லையா?'' என ஷாமா ரீச்சர் கொதித்தெழுந்தார்.

''இல்லைத்தான். நாம் பார்க்கும்போது இங்குள்ள முக்கால் வாசிப் பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். அதிகம் படித்தவர்கள்கூட, நல்ல தொழிலில் இருப்பவர்கள் கூட நாளாந்தம் றோட்டில எத்தனையோ பரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டே போகிறார்கள். இப்ப உமக்கு நடந்தது போல. ஆனால் ஒவ்வொருவரும் எனக்குத்தானே இப்படியெண்டு மனம் நோகிறார்கள். வெளியே அதிகம் பேர் சொல்வதில்லை. அதனாலதான் தொடர்ந்தும் இப்படியான சேட்டைகளை இளைஞர்கள் செய்கிறார்கள். தொகுத்துப் பார்த்தால் வெளியே போகிற எல்லாப் பெண்களுக்குமே பிரச்சினைதான். அதை யார் உணருகினம். தாங்கள் வளர்த்துவிட்ட அவலங்கள் தங்கட கதவையும் ஒரு நாள் தட்டும் என்ற உண்மையை இப்பத்தே பொடியள் எப்பதான் அறிவாங்களோ...'' என கைலாசம் அடுக்கிக் கொண்டே போனார்.

ஷாமா ரீச்சருக்கு குழப்பமாக இருந்தது. ''இவ்வளவு கீழ்த்தரமாவா எங்கட தமிழ்ச் சமூகம் இருக்கு. பேப்பரை எடுத்தாலே எல்லாத் தலைப்பும் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல் என்ற செய்திதான் காலங்காத்தாலேயே மனம் குழம்பிப் போய்விடும். பிறகு நாள் முழுவதும் குழப்பம்தான''.

கைலாசம் தொடர்ந்தார். ''அந்தக் காலத்தில நாங்கள் படிக்கேக்கை வாத்தியாரை எங்கயாவது கண்டாலே ஒளிச்சிடுவம். இல்லையெண்டா வேற பாதையால மாறிவிடும். இப்பத்தே பொடியள் ரீச்சர் மாஸ்டரை 'ஹாய்' போட்டு நலம் விசாரிக்குதுகள். என்னெண்டு உருப்படும் நாடு.

வெளிநாடுகளில உள்ள சனங்கள் எல்லாம் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு அது இது எண்டு வளர்ந்துக்கொண்டு போக எங்கட தமிழ்ச்சனம் இப்படியே சீரழிஞ்சு போகப் போகுது.

வெளிநாட்டில நிக்கிறதுகள் அங்க பனியிலும் வெய்யிலிலும் கஸ்ரப்பட்டு உழைச்சு அனுப்ப இஞ்ச இருக்கிறதுகள் ஒவ்வொரு மோட்டார் சைக்கிளையும் வைச்சுக்கொண்டு காசை அள்ளிக் கரைக்கிதுகள். இதுக்கெல்லாம் யார் காரணம். பெற்றோர்தான். பிறகு பிள்ளையைக் குறை சொல்லி என்ன பிரயோசனம்''.

''என்னப்பா, இப்பத்தே பிள்ளையள் ஆர் தாய் தகப்பன'ன்ர சொல்லைக் கேக்கினம்? அதுகளை ஏன் குறைசொல்லுவான்'' என ஷாமா ரீச்சர் பெற்றோருக்காக பரிந்து பேசினார்.

''அது சரிதானப்பா. கேக்காதுகள் தான். இப்ப அவையின்ர வளர்ப்பு பிழைச்சதாலைதான் பிள்ளைகள் தரங்கெட்டுப் போகுதுகள். அத்திவாரம் பிழைச்சால் கட்டிடம் என்ன ஆகும்....?'' என மனைவியைப் பார்த்து கைலாசம் கேட்டார். ஷாமா ரீச்சருக்கும் அது சரியெனப்படவே அமைதிகாத்தார்.

''இருந்தாலும் என்ர மனம் அமைதியடையிது இல்லையப்பா. என்னெண்டு என்ர பிள்ளையளை இச் சமூகத்தில வளர்த்தெடுக்கப் போகிறேனோ தெரியலே கடவுளே'' என ஏங்கினார் ரீச்சர். அவரது ஏக்கம் நியாயமானதுதானே. அவரும் ஒரு தாய்தானே.

ஒவ்வொரு குடும்பமும் சீர்திருத்தமாய் இருந்தால் ஒரு ஊர் அமைதியாகும். ஒரு ஊர் அமைதியானால் ஒரு நாடே சுபீட்சம் பெறும். இதை யாரிடம் சொல்லுறது.

வாசலில் மகள் சந்தியா வின் சைக்கிலோசை கேட்டு கணவன் மனைவி இருவரும் தங்கள் விவாதத்தை நிறுத்திக் கொண்டனர். மகளுக்கு தேனீர் தயாரிக்க சமையலறைக்குள் நுழைந்தார் ஷாமா ரீச்சர். அவரது உள்ளம் அன்று நடந்த சம்பவத்தையே அசை போட்டுக்கொண்டிருந்தது.

சமூகம் ஒரு சாக்கடை எண்டு விலகுவதா? இல்லை அது சாக்கடையாகாமல் காப்பதா? இதையார் செய்யப் போகிறார்கள். பெண்பிள்ளைகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பெற்றோரும் வயித்தில நெருப்பையெல்லோ கட்டியிருக்கினம். இதுக்கெல்லாம் ஒரு முடிவு நிச்சயம் வரும். ஆனால் அது எப்போது எண்டுதான் விளங்கேல.

தேனீரோடு வெளியே வந்த ஷாமா ரீச்சரின் உள்ளம் சுடுநீரை விட அதிகமாகவே கொதித்தது.

முற்றும்.

## விபரம் சேகரிப்பு

(பொன்னாலை)

கடந்த டிசம்பர் மாதம் இடம் பெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றி சித்தியடைந்த அந்தண மாணவர்களின் விபரங்களை நியந்தரீ என்ற அமைப்பு சேகரித்து வருகின்றது.

இப்பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் தமது பெயர் விபரங்களை சிவன் கோவில நல்லூர் -யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-49)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 48

### இது என்ன வேலை?



கல்கத்தாவை விட்டு அன்னையே போன்ற சென்னையை நோக்கி எங்கள் வண்டி புறப்பட்டது. வண்டி போகும் பொழுது முதல் வகுப்பில் என் அருகில் இருந்த அன்பர் ஜன்னல் கதவ்வ ஏற்றுவதும் இறக்குவதுமாக இருந்தார். மற்றொரு அன்பர் "இது என்ன ஓயாமல் கதவை ஏற்றுகின்றீர்; இறக்குகின்றீர்?" என்றார்.

அப்போது அடியேன் "இது கடவுள் செய்யும் வேலையாயிற்றே?" என்றேன்.

"இது கடவுள் வேலையா!"

"ஆம்; கடவுள் அந்தந்த உயிர்களின் புண்ணிய பாவங்களுக்கேற்ப சில உயிர்களை மேல் நிலைக்கு ஏற்றுகின்றார். சில உயிர்கள கீழ்நிலைக்கு இறக்குகின்றார். சிறையில் இருந்தவரைப் பெரும் பதவியில் ஏற்றுகின்றார். பெரும் பதவிகளில் இருந்தவரை வெறும் ஆளாகச் செய்கின்றார். வறியவனைச் செல்வச் சீமானாகவும், செல்வச் சீமானை வறியவனாகவும் செய்கின்றார். குப்பைத் தொட்டியைக் கோபுரமாக்குகின்றார். பெரிய அரண்மனையைக் கழுதை ஒதுங்கும் குட்டிச் சுவராக்குகின்றார். இது தான் இறைவன் புரியும் வேலை" என்றேன். 18-10-61இல் சென்னை சேர்ந்தோம்.

பன்னெடுங்காலமாக ஓய்வு. ஒழிச்சல் இன்றி இருவினைத் தொடர்களால் இறந்து பிறந்து மாறி. மாறி உழல்கின்ற ஆன்மா, இருவினையொப்பு-மலபரிபாகம் எய்தி, சத்தினிபாதம் நிகழ்ந்தவுடன், இறைவன் திருவடி நிழலில் ஓய்வுபெறுவது போல் எங்கள் புகைவண்டியும் சென்ட்ரலில் ஓய்வு பெற்று நின்றது. (இந்த யாத்திரை 63 நாட்கள்)

பலர் வந்து என்னை வரவேற்றார்கள்.

### சென்னையில் பாராட்டு

கு. அய்யா. சுப்பிரமணிய முதலியாரும், என் தமக்கை மகன் துரை கோதண்டபாணியும் சேர்ந்து சென்னை மயிலை ஸ்ரீகபாலீசுவரர் திருக்கோயில் 18-20-61மாலை 8மணிக்கு எனக்கு பாராட்டு வரவேற்பு விழா செய்தார்கள். நான் "சிவசக்தி" என்னும் பொருள் பற்றி சிறப்புரை நிகழ்த்தினேன்.

நான் முதல் முறை மலேயா சென்று திரும்பிய போதும் 4-8-1956 மாலை மயிலை ஸ்ரீகபாலீசுவரர் திருக்கோயிலில் எனக்கு வரவேற்புப் பாராட்டு விழா மேலே குறிப்பிட்ட அன்பர்கள் சிறப்புற நிகழ்த்தினார்கள் நான் "சைவ சமய உண்மைகள்" சிலவற்றை விளக்கி விரிவுரை செய்தேன்.

### வள்ளிமலைத் திருப்பணி
### மஹா கும்பாபிஷேகம்

வள்ளிமலை என்ற திருத்தலம் வடார்க்காடு மாவட்டம். உலக மாதாவாகிய வள்ளி அம்மையார் அவதரித்த புனிதத் தலம். முருகப்பெருமானுடைய வேதங்களும் காணாத பாதங்கள் நான்கு இடங்களிலே தோய்ந்தன. அவைகளாவன: முத்தி வீடு, தேவர்கள் தலை, வேதம், வள்ளிமலை.

நாம் முத்தி வீட்டையும், தேவர்களையும், வேதத்தையும் காண இயலாது. வள்ளிமலையைக் காணலாம். இதனை அருணகிரியார் கூறுமாறு காண்க.

**சாடுந் தனிவேல் முருகன் சரணம**
**சூடும்படி தந்தது சொல்லு மதோ**
**வீடும் சுரர் மாமுடி வேதமும் வெங்**
**காடும் புனமும் கமழும் கழலே.**

இத்தகைய தலத்தில் பல மகான்கள் தவம்செய்து சித்திபெற்றனர். அளவற்ற மகிமை உடையது. மலைமீது குகைக்கோயிலில் முருகப்பெருமான் வீற்றிருக்கின்றார். அடிவாரத்தில் ஆறுமுக சுவாமி ஆலயம் உள்ளது. இக்கோயிலைப் புதுப்பித்து இராஜகோபுரம் அமைத்துத் திருப்பணி செய்யவேண்டுமென்று வேலூர் வள்ளிமணாளன் திருப்புகழ் பாராயண சங்கத்து அன்பர்கள் கருதினார்கள். அச் சங்கத்திற்கு அடியேன் தலைவன். அத்திருப்பணிக்காக என்னுடன் இருந்து அல்லும் பகலுமாக வேலூர் தருமகுணசீலர் A.S.அருணாசலம் பிள்ளை அவர்களும் மு. பெருமாள் அவர்களும் உழைத்தார்கள்.

வேலூர் கோட்டைப் பெருவெளியில் 40 நாள் மகாபாரதம் விரிவுரைசெய்தேன். அதில் பெருந்தொகை சேர்ந்தது. பெங்களூர் முதலாகிய ஊர்களிலும் வசூல் செய்து சுமார் 3 இலட்சம் ரூபாவில் இராஜகோபுரமும், ஏனைய திருப்பணிகளும் செய்து முடித்தோம்.

1962 ஆகஸ்ட் 20-ஆம் தேதி மஹா கும்பாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 125 மூட்டை அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்தேன்.

ஆகஸ்ட் 15-ஆம் தேதி அருணகிரியார் விழாவிற்குத் திருவண்ணாமலை வந்தேன். பகல் 12 மணி முதல் 1 மணி முடிய விரிவுரை புரிந்தேன். சென்னைக்குப் போவதற்கு என்ன வழி என்று சிந்தித்துக்கொண்டு நின்றேன்.

அப்பொழுது எனது நண்பர் ஒருவர் என்னிடம் வந்து "என்ன யோசிக்கின்றீர்?" என்று கேட்டார்.

"நான் சென்னைக்குப் போகவேண்டும். அதற்கு என்ன மார்க்கம்'என்று யோசிக்கிறேன்" என்று கூறினேன்.

"நம்முடைய காரில் போகலாம்" என்றார்.

"நீங்கள் என்ன செய்வீர்?" என்று கேட்டேன்.

"எனக்கு வேறு கார் இருக்கிறது" என்றார்.

உடனே அவருடைய டிரைவரை அழைத்து "சுவாமியைக் கொண்டு போய் சென்னையில் விட்டு விட்டு வா" என்று கூறினார்.

நான், "கும்பாபிஷேக சம்பந்தமான சில அலுவல்களை வேலூரில் பார்க்க வேண்டியிருப்பதால் வேலூர் வழியாக சென்னைக்குப் போகலாமா?" என்று கேட்டேன். "சுவாமிகள் விருப்பம் போல் செய்யுங்கள்" என்றார்.

நான்" காரை நாளைக்குச் சென்னையில் வைத்திருந்து மறுநாள் வள்ளிமலைக்குப் போய் காரைத் திருப்பி அனுப்பி விடலாமா?" என்று கேட்டேன்.

" உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்" என்றார்.

நான் பூசைப் பெட்டியுடன் அந்த 'ப்ளைமுத்'காரில் ஏறிப் போய்விட்டேன்.

அந்தக் காரை எனக்குத் தந்தவர் பெயர் சுப்ரமண்ய முதலியார். அவருடைய கம்பெனி கார்த்திகேயன் கம்பெனி. டிரைவர் பெயர் ஆறுமுகம். எல்லாம் முருகன் மயமாகவே இருந்தன.

மாலை வேலூர் போய் கும்பாபிஷேக அலுவல்களைப் பார்த்துவிட்டு இரவு சென்னை சேர்ந்தேன்.

நான் எனது இல்லத்தில் மேல்மாடியில் படுத்துக் கொண்டேன். படுத்த உடனே உறக்கம் வரும் எனக்கு அன்று உறக்கம் வரவில்லை.

கும்பாபிஷேகத்திற்குக் குறைந்தது முப்பதினாயிரம் ரூபாய் வேண்டும். கையில் பத்தாயிரம் தான் இருந்தது. இன்னும் இருபதாயிரம் வேண்டுமே! இடையில் மூன்று நாள்கள் தான் இருக் கின்றன. இருபதினாயிரத்துக்கு என்ன செய்து? யாரை அணுகுவது என்று பலவாறு சிந்தித்து வேதனைப்பட்டேன்.

(தொடரும்)

# பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) வெற்றிடம் -2005

பின்வரும் பிரதேசங்களுக்கான செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) தெரிவு செய்யப்படவுள்ளனர்.

**வலிகாமம்**

| | |
|---|---|
| ஒட்டுமடம் | பண்டத்தரிப்பு |
| கொக்குவில் | குருநகர் |
| தாவடி | பாசையூர் |
| இணுவில் | அரியாலை |
| மருதனார்மடம் | நாவாந்துறை |
| சுன்னாகம் | கொட்டடி |
| மல்லாகம் | சுண்டுக்குளி |
| தெல்லிப்பழை | ஈச்சமோட்டை |
| ஏழாலை | கொய்யாத்தோட்டம் |
| கந்தர்மடம் | **தென்மராட்சி** |
| நல்லூர் | நெடுங்குளம் (அரியாலை) |
| நாயன்மார்கட்டு | நாவற்குழி |
| இருபாலை | கைதடி |
| கோப்பாய் | நுணாவில் |
| நீர்வேலி | மட்டுவில் |
| சிறுப்பிட்டி | மீசாலை |
| புத்தூர் | கொடிகாமம் |
| வாதரவத்தை | மிருசுவில் |
| ஆவரங்கால் | எழுதுமட்டுவாள் |
| அச்சுவேலி | பளை |
| நவக்கிரி | கச்சாய் |
| திருநெல்வேலி | முகமாலை |
| உரும்பிராய் | **தீவகம்** |
| ஊரெழு | மண்டைதீவு |
| அச்செழு | அல்லைப்பிட்டி |
| புன்னாலைக்கட்டுவன் | மண்கும்பான் |
| ஆனைக்கோட்டை | வேலணை |
| நவாலி | சாட்டி |
| மானிப்பாய் | சரவணை |
| சண்டிலிப்பாய் | கரம்பொன் |
| சங்கானை | நாரந்தனை |
| சித்தங்கேணி | சுருவில் |
| மூளாய் | புளியங்கூடல் |
| அராலி | நயினாதீவு |
| மாதகல் | நெடுந்தீவு |
| இளவாலை | அனலைதீவு |
| சில்லாலை | எழுவைதீவு |

**தகுதிநிலை**

* 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்.

* க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களும், பத்திரிகைத்துறையில் ஆர்வமுடையவர்களும்.

* முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி,பிறந்த திகதி, கல்வித்தகைமை, தே.அ.அ.இலக்கம், கிராமசேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு என்பவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ் இரண்டு, கல்விச் சான்றிதழ், தே.அ.அட்டை மற்றும் ஆவணங்களின் போட்டோப்பிரதிகள், புதிய கோவை (பைல்) என்பவற்றுடன்,

**வலிகாமம்**
19-04-2005 காலை 9.30மணிக்கும்

**தென்மராட்சி-தீவகம்**
20-04-2005 காலை 9.30 மணிக்கும் நேரில் வரவும்.

15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி -சங்குநாதம்

# கரையோர பிரதேச அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி


வடக்கு-கிழக்கு மாகாணத்தின கரையோரப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 530 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. கரையோர சமூக அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக திட்ட பணிப்பாளர் மரியதாசன் குருஸ் தெரிவித்தார்.

இந்த நிதியுதவியின் மூலமாக வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

விசேடமாக வடக்கு-கிழக்கு மாகாண யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் காரணமாக பல்வேறு பாதிப்புக்களை அனுபவித்து வரும மீனவர் சமூகங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு பல்வேறு சமூக அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதன் மூலம் வடக்கு-கிழக்கு மாகாண கரையோரப் பாதுகாப்பு சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 320 கரையோரக் கிராமங்களும் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அமைந்துள்ள 2 மீன்பிடித்துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (க-9)

# மீள்பார்வை



## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 38



## அத்தியாயம் X

***நிலையியற் கட்டளைகள் குழு***

நிலையியற் கட்டளை 123 இன் கீழ் நிலையியற் கட்டளைகள்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தின் அலுவல் தொடர்பான நடைமுறை, ஒழுங்கு ஆகிய விடயங்களைப் பரிசீலனை செய்தலும் நிலையியற் கட்டளைகளுக்கு அவசியமானவையென அது கருதுகின்ற எவையேனும் திருத்தங்களை விதந்துரைத்தலும் நிலையியற் கட்டளைகள் குழுவின் கடமையாகும். உறுப்பினரெவரும் குழுவுக்கு உரிய முன்னறிவித்தலுடன் திருத்தங்களை முன்மொழியலாம். அவற்றைக் குழு பரிசீலனை செய்து அதன் அறிக்கையில் சேர்த்துக்கொள்ளலாம். அறிக்கை முறைப்படி ஏற்றுக்கொள்ளப்படுவதற்குச் சபையில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.(நிலையியற் கட்டளை 134)

குழு சபாநாயகரையும் பிரதிச் சபா நாயகரையும் குழுக்களின் பிரதித் தவிசாளரையும் தெரிவுக்குழுவால் நியமிக்கப்படும் வேறு ஆறு உறுப்பினர்களையும் கொண்டதாக இருக்க வேண்டும்

***சபைக்குழு***

சபைக்குழு, உறுப்பினர்களின் பாதுகாப்பு, சௌகரியம், வசதி என்பவை தொடர்பில் பாராளுமன்றத்திலும் அதன் பிற கட்டிடங்களிலும் செய்யப்பட வேண்டிய வசதிகளைப் பற்றி ஆலோசனை வழங்குவதற்கெனத் தனிப்பட அமைந்த ஒரு குழுவாகும். அது சபாநாயகரின் தலைமையில் வேறு ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டது. இக் குழுவின் கூட்ட அறிக்கைகள் எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

***நிலையியற் கட்டளைகளுக்குப் புறம்பாக நியமிக்கப்பட்ட குழுக்கள்***

நிலையியற் கட்டளைகளுக்குப் புறம்பாக நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் பாராளுமன்றத்தில் உண்டு. அவையாவன, பணியாளர் ஆலோசனைக் குழுவும் சர்வதேச பாராளுமன்றச் சங்கங்களின் உள்நாட்டு கிளைகளின் குழுக்களும்.

(1) பணியாளர் ஆலோசனைக் குழு

பாராளுமன்றத்தின் நிருவாகத்துக்கும் நிதி முகாமைத்துவத்துக்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தலைமை தாங்குகின்றார். அவற்றை அவர் 1953 இன் பாராளுமன்றப் பணியாட்டொகுதிச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பணியாளர் ஆலோசனைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் நிறைவேற்றுகின்றார். இக்குழு சபாநாயகரையும் சபை முதல்வரையும் நிதி அமைச்சரையும் எதிர்க்கட்சித் தலைவரையும் அல்லது அவரின் நியமத்தரையும் கொண்டுள்ளது.

குறிப்பாக பாராளுமன்ற மதிப்பீடுகள், புதிய பதவிகளை உருவாக்குதல் உட்படப் பணியாளரின் விடயங்கள் தொடர்பான பிரதான ஆலோசனைகள் எல்லாம் இக்குழுவால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

(2) பொது நலவரசுப் பாராளுமன்றச் சங்கம், அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் , சார்க் பாராளுமன்றச் சங்கம் ஆகியவற்றின் நிறைவேற்றுக் குழுக்கள்

அனைத்துப்பாராளுமன்ற ஒன்றியிம், பொதுநலவரசுப் பாராளுமன்றச் சங்கம், சார்க்(பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கம்) பாராளுமன்றச் சங்கம்ஆகிய உலகின் பிராதன சார்வதேச பாராளுமன்ற சங்கங்களிள் இலங்கைப் பாராளுமன்றம் உறுப்புரிமை பெற்றுள்ளது. இச் சங்கங்களின் இலங்கைக் கிளைகள் செயற்படுவதற்குத் திறைசேரி வருடாந்தக் கொடை யொன்றை அளிப்பதுடன் பொதுநலவரசுப் பாராளு மன்றச் சங்கத்தின் தலைமையகத்திலிருந்தும் பாராளுமன்றத்துக்கு வருடாந்த உதவுதொகையொன்று கிடைக்கின்றது.

இச் சங்கங்ளுக்காக உள்நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள நிறைவேற்றுக் குழுக்கள், அந்தந்தச் சங்கக் கிளைகளின் எல்லா அலுவல்களையும் நிர்வகிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளன. இக்கிளைகள் எல்லாவற்றுக்கும் சபாநாயகர் பதவி வழித் தலைவராகவும் செயலாளர் நாயகம் கௌரவ செயலாளராகவும் விளங்குகின்றனர். சபை முதல்வரும் எதிர்க்கட்சித் தலைவரும் உப தலைவர்களாயுள்ளனர்.

தேவைப்படுகின்ற போது நிறைவேற்றுக் குழுக்கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. வருடாந்தப் பொதுக் கூட்டம் வரவு செலவுத்திட்ட விவாதத்தின் முடிவில் நடத்தப்படுகின்றது.

ஏனைய கடமைகளோடு நிறைவேற்றுக் குழுக்கள் வருடாந்த சர்வதேச மாநாடுகளுக்கான பாராளுமன்றப் பேராளர் குழுக்களையும் பரஸ்பர நல்லெண்ணத் தூதுக்குழுக்களையும் தீர்மானிக்கின்றன.

***ஏனைய சட்டசபைகளில் பொதுவாகக் காணப்படுகின்ற போதிலும் இலங்கையில் இன்னமும் அமைக்கப்படாத குழுக்கள்***

(1) ஒழுக்கவியல் பற்றிய குழு

பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நேர்மையும் உயர் ஒழுக்க நெறித்தரங்களையும் பேண வேண்டியமை, அனேக சட்ட சபைகள் அத்தகைய விடயங்களை ஆராய்வதற்குக் குழுக்களைத் தாபிப்பதற்கு வழிவகுத்தது. இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் வழமையான சட்டத்தின் கீழ் ஊழலுக்கெதிராகக் குற்றம்சாட்டப்படலாம்.

தன்னிலைப் பிரேரணையொன்றின் மூலமாகவன்றி ஓர் உறுப்பினரின் நடத்தையைச் சபையில் விவாதிக்க முடியாது.அத்தகைய ஒரு பிரேரணை பிரேரிக்கப்பட்டால் சாபாநாயகர் தக்கதெனக் கருதுகின்றவாறு அது ஒரு தெரிகுழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும். அத்தகைய விடயங்கள் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கும் ஆற்றுப்படுத்தப்படலாம். இலங்கையில் பாராளுமன்றம் அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் கீழ் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றின் விதப்புரையைத் தொடர்ந்து ஒரு தீர்மானத்தை அங்கீகரிப்பதன் மூலமாகவன்றி ஓர் உறுப்பினரை நீக்கமுடியாது. அத்தகைய தீர்மானம் முழு உறுப்பினர் தொகையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை மூலமும் நிறைவேற்றப்படவேண்டும்.

ஐக்கிய இராச்சியத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்கக் கோவையொன்றை வகுப்பதற்காக 1994இல் நோலன் குழு நியமிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்கக் காங்கிரசில் ஒழுக்கவியல் குழு மூதவையின் (செனட்டில்) செயற்படுகின்ற அதேவேளையில் உத்தியோகபு,ர்வ நடத்தைத் தரங்கள் பற்றிய குழுவொன்று சனப்பிரதிநிதிகள் சபையில் உள்ளது. 1997 இல் இந்தியப் பாராளுமன்றம் ஒழுக்கவியல் குழுவொன்றை ராஜ்ய சபையில் நிறுவியது. சபையிலிருந்து ஓர் உறுப்பினரை விலக்கும்படி விதந்துரைப்பதற்கு அக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(2) துணைநிலைச் சட்டங்கள் பற்றிய குழு

அரசியலமைப்பின் 76(3) ஆம் உறுப்புரையின் மூலம் விதிக்கப்பட்ட நோக்கங்களுக்காகத் துணைநிலைச் சட்டங்களை ஆக்குவதற்கு எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களின் குழுவுக்கு அதிகார மளிக்கின்ற ஏற்பாட்டைக் கொண்ட சட்டத்தைப் பாராளுமன்றம் ஆக்கலாம். துணைநிலைச் சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகளென்ற வடிவத்தில் இருக்கலாம். துணைநிலைச் சட்டங்கள் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று பாராளுமன்றத்தின் சில சட்டங்கள் ஏற்பாடு செய்துள்ள போதிலும் ஏனையவை அவ்வாறு செய்யவில்லை. மேலும் சில சட்டவாக்கங்களின் விடயத்தில் துணை நிலைச் சட்டங்கள் வலுவுக்கு வருவதற்கு முன்னர் அவை பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டு மென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதேவேளையில் வேறு சில சந்தர்ப்பங்களில் அத்தகைய சட்டங்கள் வெளியிடப்பட்டவுடன் வலுவுக்கு வந்துவிடுகின்றன. பின்னர் அவை பாராளுமன்றத்தின் முன்கொண்டு வரப்பட்டுப் பாராளுமன்றத்தின் அங்ககாரத்தைப் பெறாவிட்டால் பாராளுமன்றம் அவற்றை நிராகரித்த தேதியிலிருந்து அவை நீக்கப்படுகின்றன. எனினும் வேறுசிலவற்றில் அத்தகைய விதிகள் ஆகியவற்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாயிருக்கலாம்.

(தொடரும்)

# பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரசாரம்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு சுனாமிப் புனரமைப்புப்பணிகளை முன்னெடுக்க அரசு புலிகள் இணைந்த பொதுக் கட்டமைப்பு அவசியம் என்பதை வலியுறுத்தி ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சி பிரசாரப் பணிகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரசாரப்பணிகளுக்கு சுதந்திரக் கட்சியின் பிரதியமைச்சர்கள் அமைப்புமுழு ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்துள்ள்து. இதன்படி கிழக்கு மாகாணம் உட்பட 18 மாவட்டங்களில் இந்த பிரசசாரப் பணி முன்னெடுக்கப்படும் என்று சுதந்திரக்கட்சியின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதனை முன்னிட்டு எதிர்வரும் 23,24ஆம் திகதிகளில் 18 மாவட்ட களிலும் பொதுக்கட்டமைப்பின் அவசியம குறித்து கருத்தரங்குகளை நடத்த சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைய பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி நடாத்தப்படும் இக்கருத்தரங்கில் சுதந்திரக்கட்சி மாவட்ட அமைப்பாளர்களும் கட்சி செயற்பாட்டாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமையவே பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ஜே.வி.பி. பொதுக் கட்டமைப்புக்கு தெரிவித்துவரும் எதிப்பை முறியடிக்கவே மாவட்ட மட்டத்தில் இவ்வாறான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (க-9)

# மத்திய வங்கிக்கு மாதாந்தம் மூவாயிரம் கோடி ரூபா நட்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை மற்றும் பொற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றினால் மத்திய வங்கிக்கு மாதாந்தம் சுமார் 3ஆயிரம் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டு வருவதாக மத்திய வங்கியின் மூத்த பிரதியாளுநர் டபிள்யூ ஜே. விஜயவர்த்தன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையினைக் கருத்தில் கொண்டு நட்டத்தொகையினை வரி விதிப்புக்கள் மூலம் ஈடுசெய்ய வேண்டும் இல்லை எனில் எரி பொருட்களினது விலையினையும் மின் கட்டணத்தையும் அதிகாரிக்க வேண்டிய நிலை ஏற்படும். மத்திய வங்கியின் இவ் விதந்துரைகளை அரசு உடனடியாக அமுல செய்யப்படாத விடத்து நாட்டில பணப்பிளக்கம் குறைவடையும இதனால் புதிய நாணயத்தாள்களை மத்திய வங்கி அச்சிட நேரிடும் அவ்வாறான நிலையில பண வீக்கம் மேலும் அதிகரிதது பொருளாதார பின்னடைவை ஏற்படுத்தும் என அவர் எச்சரித்துள்ளாா.(ச-4)

# யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் மயிர்க்கொட்டிகள் பெருக்கம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மயிர்க் கொட்டிகளின் தொல்லை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. என்றுமில்லாதவாறு இவ் முறை தீவுப் பகுதிகள் உட்பட யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மயிர்க்கொட்டிகள் பெருகியுள்ளன. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக காலையில் மயிர்க் கொட்டிகள் மரத்தில் இருந்து இறங்கி கலைந்து செல்வதால் பொது மக்கள் தமது கடமைகளை ஒழுங்கான முறையில் செய்ய முடியாமல் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மேலும்,வீதி ஓரங்களில் பூவரசு, முருங்கு போன்ற மரங்களே பெரும்பாலும் இருப்பதனால் இம் மரங்களில் அதிகமானளவில் பெருகியிருக்கும் மயிர்க்கொட்டிகள் அவற்றிலிருந்து இறங்கி வீதிகளில் ஊர்ந்து திரிவதால் வீதியால் பயணிப்போர் பெரும் கஸ்ரங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக காரைநகரில் இம் முறை மயிர் கொட்டிகள் அதிகமாகப் பெருகியுள்ளதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் தமது கடமைகளை செய்வதற்கு பதிலாக தினமும் மயிர் கொட்டிகளை அழிக்கும் வேலையில் ஈடுபட வேண்டியுள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ற-19)

# அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிக் கிளைகளில் 31.12.2003ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக பிராந்திய முகாமையாளர் மு.க சிவபாத விருதயர் அறிவித்துள்ளார்.

யாழ். பிராதன வீதி, நெல்லியடி, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ். பல்கலைக் கழகம், யாழ். கனாதிட்டி, யாழ். ஸ்ரான்லி வீதி காங்கேசன்துறை ,அச்சுவேலி, சங்கானை ,சுன்னாகம் மற்றும் பருத்தித் துறை,மக்கள் வங்கிக் கிளைகளில் மேற்படி காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்டு மீள்க்கப்படாத நகைகள் எதிர்வரும் 23,24, மற்றும் 25ஆம் திகதிகளில் ஸ்ரான்லி வீதிக் கிளையில் ஏலத்தில் விற்கப்பட்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற)

உயர் கல்விக்கு உறுதுணையாக...
32 வருடங்கள் சேவையாற்றிய தனித்துவமான நிறுவனத்தில்
O/L Day Class
பகல் நேர வகுப்புகள்
காலை 8.30 –பி.ப.1.15
அனுமதிகள் 30ஆம் திகதி வரை மட்டுமே வழங்கப்படும்
மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
The Express Institute
Irupalai, Kopay.
(1212) –அதிபர்.

# பார்த்திப வருட பொதுப் பலன்கள்

## மேடம்



பழகுவதற்கு கடினமாக இருந்தாலும் எதிலும் குழந்தையாக செயல்படும் உங்களுக்கு பார்த்திப வருடத் தொடக்கத்தில் அதாவது 26.05.2005 முதல் அர்த்தாஷ்டமச் சனி தொடங்குகிறது. குரு பகவான் 6ஆம் வீட்டில் சஞ்சரிப்பதனால் சில இடையூறுகளை முதலில் சந்தித்தாலும் 28.09.2005 குருபகவான் 7ஆம் வீட்டிற்கு வருவதனால் குரு மாற்றம் முதல் உங்கள் வாழ்வில் ஏற்ற மிகு பலன்கள் நடக்கும். ஆண்டின் பிற்பாதியில் சுபகாரியங்கள் கைகூடும். அமைப்பு மங்கள ஓசையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தொழில் உத்தியோக ரீதியாக தேவையில்லாத சில அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆண்டின் பிற்பாதியில் அதாவது குரு மாற்றத்திற்கு பிறகு பொருளாதார ரீதியாக நல்லதொரு நற்பலன் உண்டாகும். சர்பகிரகமான ராகுகேது 6,12 இல் சஞ்சரிப்பதால் கடந்த காலங்களில் கணவன் மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் முற்றிலும் விலகி தமிழ்ப்புத்தாண்டு தொடக்கத்தில் குடும்பத்தில் மகிழ்ச்ச ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை ஏற்பட்டாலும் நல்ல மதிப்பெண் கிடைத்து நல்லதொரு நிலையினை அடைய நேரிடும். கடந்த காலங்களில் இருந்த வம்பு வழக்குகள் யாவும் படிப்படியாக குறைந்து குடும்பத்தில் இனிய சம்பவங்கள் அரங்கேறும். பொதுவாக பார்த்தால் குரு மாற்றம்வரை நீங்கள் நிதானித்து செயலபடுவது உத்தமம்.

**உடல் நிலை:-** உங்கள் உடல் நலம் ஆரம்பத்தில் சிறு சிறு உஷ்ண சம்மந்தமானவற்றால் பாதிப்படைந தாலும் பிற்பாதியில் சிறப்பான உடல்நலத்தினையும் பலமும் வளமும் கூடுகின்ற காலமாக அமையும். மனைவி மற்றும் குழுந்தைகளின் உடல்நலம் சிறப்படையும். மருததுவச செலவுகள் குறையும். வெளியூர் பயணம் கூடுமான வரையில் அலைச்சலை தவிர்த்துவிடுவது உத்தமம்.

**குடும்பம் குழந்தைகள்:-** குடும்பவாழ்வில் சிறு சிறு சோதனைகள் உண்டானாலும் சனி மாற்றம் சோதனையை ஏற்படுத்தினாலும் கூட 28.09.2005க்கு பிறகு குரு 7இல் சஞ்சரிக்கும் காலம் சிறப்பாக அமையும். குடும்பத்தில் தடைப்பட்ட திருமணம் கைகூடும். பொருளாதார நிலையில் முற்பாதியை விட பிற்பாதியில் அற்புதமான தனவரவுகளையும் சேமிப்புகளையும் பெறுவீகள். ஒற்றுமை சிறப்பாக கணவன் மனைவி இடையே அமையும். நவீன பொருள் வீடு வண்டி வாகனம் சேரும்.

**உத்தியோகநிலை:-** உத்தியோக நிலையில் படிப்படியாக பதவி ஊதிய உயர்வுகளையும் அதிகாரிகளின் முழு ஆதரவையும் பெறுவீர்கள். குரு மாற்றத்திற்குப் பிறகு உங்களுக்குப் புதிய வேலை நிரந்தரமான வேலை கண்டிப்பாக அமையும். வெளியூர் பயணம் வெளிநாட்டுப் பணியும் சாதகமாக அமைந்து மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும். உடன் பணிபுரிபவர்கள் உதவுவார்கள்.

**தொழில் வியாபாரம்:-** தொழில் வியாபார நிலையில் பிரமாதமான அபிவிருத்தியையும் ஏற்றத்தையும அடைவீர்கள். ஆரம்பத்தில் அரசு மூலம் சிறு சிறு சோதனைகளும் தேவையற்ற வீண் பிரச்சினைகளும் எதிரிகளின் தொல்லைகளும் ஏற்பட்டாலும் 28.09.2005க்கு பிறகு அதனை எளிதாக சமாளித்து பெரிய அளவில் மாறுதலையும் லாபத்தையும் அடைவீர்கள். கூட்டுத் தொழிலில் சிறப்பான ஏற்றத்தை அடைவீகள். ஏஜன்ஸி, கண்டிராக்ட் போன்றவை சிறப்பான படி நடைபெறும்.

**பெண்களுக்கு:-** உங்களுக்கு உடல்நலம் சிறு சிறு சோதனைகளை ஏற்படுத்தினாலும் குரு 7இல் சஞ்சரிக்க உள்ளதால் (28.09.2005) உங்களது அபிலாஷைகள் யாவும் நிறைவேறும். நினைத்தபடியே வரன் அமைந்து தடபுடலாக திருமணம் கைகூடும். கணவன் மனைவி உறவு மிகவும் பிரமாதமாக அமையப்பெறும். சிலருக்கு புத்திர பாக்கியமும் அமையும்.

**பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:-** அரசியலில் உடன் இருப்பவர்களால் சிறு சிறு இடையூறுகளை எதிர்கொண்டாலும் 28.09.2005க்கு பிறகு உங்களது சோதனைகள் எல்லாம் விலகி மக்கள் மற்றும் தலைவர்கள், தொண்டர்களின் முழு ஆதரவைப் பெறுவீர்கள்.

**கொடுக்கல் வாங்கல்:-** கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் போது சற்றே நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். பிற்பாதியில் தாராளமாள சரளமான நிலைகளும் அனுகூலமும் உண்டாகும். வம்பு வழக்குகளில் பிற்பாதியில் சாதகப்பலனை அடைவீர்கள். கடன்கள் யாவும் படிப்படியாக விலகும்.

**விவசாயிகளுக்கு:-** விளைபொருட்களில் ஆரம்பத்தில் புழு பூச்சிகள் தென்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. உங்கள் கடந்த கால நஷ்டங்களை விரைவாகவே போக்கிவிடும் அளவுக்கு லாபமும் உற்பத்திப்பெருக்கமும் உண்டாகும். உங்களின் விளை பொருட்கள் ஆண்டு பிற்பாதியில் நல்ல விலை போகும்.

**மாணவ மாணவியருக்கு:-** கல்வியில் உங்களின் ஆர்வக் குறைவுகள் மெல்ல விலகிவிடும். சிறப்பாக முயற்சிகளை மேற்கொண்டு வகுப்பில் முதல் மாணவர்களில் ஒருவராக வரும் சாதனைகளை செய்து முடிப்பீர்கள். பெற்றோர், ஆசிரியர்களின் உதவியும் ஆதரவையும் பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு:-** உங்களின் தொழில் ரீதியாக இருந்த மந்தமான நிலைகள் பிற்பாதியில் மறைந்து ஏற்றமிகு பலனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் தாமதமானாலும் அமையப்பெறும். வெளியூர் வெளிநாட்டுப் பயணத்தில் அனுகூலங்களை அடையமுடியும்.

### 14.04.2005 முதல் 25.05.2005வரை

உங்கள் ராசிக்கு 8இல் சனி சஞ்சரிப்பதும் ருணரோக ஸ்தானமான 6இல் சஞ்சரிக்கும் குரு பகவான் வக்ரம் பெற்றுள்ளதும் உங்களுக்கு அனுகூலமான பலன்களை ஏற்படுத்தும். சிறப்பாக அமையும் மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களும் சிறப்பாக சுபிட்சம் பெறுவார்கள். பொருளாதாரநிலை சிறப்பாகவும் தனவரவுகள் சரளமாகவும் அமையப்பெறும். கடன்கள் விலகும். கொடுக்கல் வாங்கலில் சரளமான நிலை அனுகூலம் கிட்டும். தொழில் வியாபார நிலையில் வெகு அற்புதமான அபிவிருத்தியும் லாபமும் அமையும். போட்டி பொறாமைகள் மறையும். கூட்டுத்தொழில் ஏஜன்ஸியில் சிறப்பான லாபம் உயர்வு அமையும். உத்தியோக நிலையில் பதவு ஊதிய உயர்வுகளும் மனதில் உற்சாகம் கொள்ளவைக்கும். கணவன் மனைவி வரவு அன்னியோன்யமாகும். திருமண சுபகாரியம் தடபுடலாக நடைபெறும்.

### 26.05.2005 முதல் 27.09.2005வரை

உங்கள் ராசிக்கு அர்த்தாஷ்டமச்சனி தொடங்கியுள்ளதும் குரு 6இல் சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பாகும். இக்காலத்தில் எதிர்பாராத சோதனைகளை சந்திக்க நேரிடும். மறைமுக எதிரிகளால் தொழில் வியாபார நிலை மிகவும் மந்தமடைவதோடு லாபம் கிடைக்காது. பொருள் தேக்கமும் பணமுடக்கமும் உண்டாகும். சிலருக்கு கொடுத்த வாக்கினைக் காப்பாற்ற முடியாத நிலையால் அவமானப்பட நேரிடும். உடல்நலத் திலும உஷ்ண சம்மந்தமான பாதிப்புகளும் தாய்வழியில் மருத்துவச் செலவுகளும் உண்டாகும். குடும்பத்தில் கணவன் மனைவி இடையே நல்ல உறவு அமையாது. உங்களின் சுக வாழ்விற்கு இடையூறுகளை ஏற்படுத்தும். பொருளாதார நிலையில் பற்றாக்குறை கள் மன வேதனை ஏற்புடுத்தும். உத்தியோக ரீதியாக சோர்வும் அடிக்கடி விடுப்பு எடுத்து அதிகாரிகளின் அதிருப்திக்கும் கோபத்திற்கும் ஆளாக நேரிடும். மாணவர்களின் கல்வியில் மந்தமான நிலை இருக்கும்.

### 28.09.2005 முதல் 22.11.2005வரை

உங்களுக்கு இக்காலத்தில் அர்த்தாஷ்டமச்சனி நடைபெற்றாலும் குருபகவான் 7இல் சஞ்சரிப்பது மூலம் அற்புதமான ஏற்றங்களை ஏற்படுத்தும். உங்கள் கடந்தகால சோதனைகள் யாவும் விலகிவிடும். பாலை வனத்தில் சோலை கண்டது போல் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படும். பொருளாதார நிலை பிரமாதமாக இருக்கும். கடன்கள் மறையும். உடல்நலம் தேறிவிடும். வீண் செலவுகளும் மருத்துவச் செல்வுகளும் மறையும். சேமிப்புகள் கூடும். வீடுகட்டி குடிபுகும் அமைப்பு தடைப்பட்ட திருமணங்கள் தடபுடலாக கைகூடி நடைபெறும் சூழ்நிலை புத்திர பாக்கியம் கைகூடும். தொழில் வியாபாரம் கூட்டுத்தொழில் வியாபாரம் ஏஜன்ஸி கண்டிராக்ட் இவை சிறப்பான லாபம் அடையும். உத்தியோக நிலையில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி ஊதிய உயர்வுகள் அமையப்பெறும். அரசியல்வாதிகளின் பெயர் புகழ் அமையப்பெறும். அரசியல்வாதிகளின் பெயர் புகழ் செல்வாக்கு கூடும் காலமாகும்.

### 23.11.2005 முதல் 5.03.2006 வரை

உங்கள் ராசிக்கு அர்த்தாஷ்டமச் சனி நடைபெற்றாலும் சனி வக்ரகதியில் உள்ளதும் குரு 7இல் சஞ்சரிப்பதும் மிகவும் பிரமாதமான அமைப்பாகும். இக்காலம் எல்லாவகையிலும் உயர்வை ஏற்படுத்திவிடும். எடுக்கும் எந்த ஒரு முயற்சியிலும் வெற்றிகள் உண்டாகும். பொருளாதார நிலை அற்புதமாக அமைந்து கடன்கள் பைசலாகும். வீடு மனை, வண்டி வாகன சேர்க்கை, ஆடை ஆபரணங்கள் சேரும். குடும்பத்தில் கணவன் மனைவி அன்னியோன்யமும் சகோதரர்கள் ஒற்றுமையுடனும் அமைவார்கள். தொழில் உத்தியோகநிலையில் சறப்பான மேம்பாடுகள் உண்டாகும். கூட்டுத் தொழில ஏஜன்ஸி லாபமும் நல்ல கூட்டாளிகளையும் உருவாக்கும். பெண்களின் ஆசைகள் நிறைவேறும். புத்திரபாக்கியம் கிட்டும். மாணவர்களின் கல்வி சாதனையாக மாறும். மேல்நாட்டிற்கு செல்லும் யோகமும் அமையும். அரசியலில் உயர்வு பதவி வகித்திடும் யோகம அமையும். விவசாயிகளுக்கு இலாபம் கூடும்.

### 06.03.2006 முதல் 13.04.2006 வரை

உங்களுக்கு இக்காலத்தில் அர்த்தாஷ்டமச்சனி நடைபெறுவதும் குரு வக்ரகதியில் சஞ்சரிப்பதும் ராகு 12இல் இருப்பதும் சோதனை தரும் அமைப்பாகும். இக்காலத்தில் உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டும். உஷ்ண சம்பந்தமான கண் எரிச்சல், சரியாக உறக்கம் வராத நிலை, மனதில் குழப்பம் உண்டாகும். மனைவி குழந்தைகளின் நலமும் பாதிக்கும். குடும்பத்தில் கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகி மன அமைதி குறையும். திருமண சுபகாரியம் தடைப்படும். தொழில் வியாபாரநிலையில் நெருக்கடிகளும் மந்தமாக லாபம் குறையும் சூழ்நிலைகளும் மன வருத்தத்தை ஏற்படுத்தும். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துப்போக முடியாது. உத்தியோக நிலையில் எதிர்பாராத இடமாற்றமும் கடுமையாக உழைக்கவும்கூட நேரிடும். மாணவர்களின் கல்வியில் ஆர்வம் குறைவதுடன் அடிக்கடி விடுப்பு எடுத்து ஆசிரியர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும்.

### நட்சத்திர பலன் அச்சுவினி

உங்களின் உடல் நலம் ஆரம்பத்தில் சிறு சிறு பாதிபபுக்கு உள்ளானாலும்கூட அதனை எளிதாக சமாளித்துவிடமுடியும். குடும்பத்தில் மருத்துவச்செலவுகள் குறைந்து வீடும். மறைமுக எதிர்ப்புகள் குறையும். கணவன் மனைவி உறவில் திருப்தியான நிலமை காணப்படும். பொருளாதார நிலையில் படிப்படியான உயர்வினை அடைவீர்கள். தனவரவுகள் பிற்பாதியில் தாராளமாக அமையும். கடன் தொல்லைகள் விலகும். சேமிப்பு, வீடு வண்டி வாகனம் பிற்பாதியில் அமையும். மங்கையர்களுக்கு திருமண சுபநிகழ்ச்சிகள் 28.09.2005க்கு பிறகு தடபுடலாக கைகூடி நடைபெற்று பூரிப்பு ஏற்படுத்தும். குழந்தைப் பாக்கியத்தையும் பெறுவீர்கள்.

### பரணி

நீங்கள் சற்று மந்தமாகவே செயல்படுவீர்கள். உடல் நலம சிறு சிறு பாதிப்பினை அடைய நேர்ந்தாலும் உட னடியாக நலம் அடைந்து விடுவீர்கள். மனைவி மற்றும் புத்திரர்களின் வழியில் ஏற்பட்ட மருத்துவச் செலவுகள் மறையும். குடும்பத்தில் கணவன் மனைவி இடையே சிறு சறு பூசல்கள் உருவானாலும் உடன் விலகி ஒற் றுமை ஏற்படும். பொருளாதார நிலையில் தாராளமான பண வரவு வந்தாலும் சிக்கனத்தைக் கையாள வேண்டும். தொழல் வியாபாரதத்ல் படிப்படியான உயர்வினை அடைய முடியும். கூட்டுத்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். எடுக்கும் காரியம் முயற்சிகளால் வெற்றியினை ஏற்படுத்தும். வெளியூர்ப் பயணம் உத்தியோகஸ்தர்களுக்கு சாதக மாகும்.

### கார்த்திகை 1ஆம் பாதம்

நீங்கள் உடல் நலனில் சற்று அக்கறை எடுத்தால் பிற்பாதியில் சிறப்பான நலம் பெறுவீர்கள். மனைவி மற்றும் தாய் தந்தை குழந்தைகளின் வழியில் மருத்துவச் செலவுகள் குறையும். குடும்பத்தில் திருமண் சுபகாரியங்களை செப்டம்பருக்குப் பிறகு நிறைவேற்றி விடமுடியும். புத்திரபாக்கியமும் அமையும். உற்றார் உறவினர் நண்பர்கள் சாதகமாவார்கள். பொருளாதார நிலையில் சுமாரான பணவரவுகள் ஏற்பட்டு கடன்களை பிற்பாதியில் அடைத்துவிடுவீர்கள். தொழில் வியாபாரம் சுமாராக நடைபெறும். லாபம் இருக்கும். போட்டி, பொறாமைகள் விலகும். கூட்டுத்தொழில் நன்றாக நடக்கும். உத்தியோக நிலையில் பதவி ஊதிய உயர்வுகள் செப்டம்பருக்கு பிறகு எதிர்பார்க்க முடியும். மாணவர்கள் கல்வியில் சாதனை ஏற்படும்.

### அதிர்ஷ்ட குறிப்புகள்

அதிர்ஷ்ட தேதிகள்:- 1,5.7,9,13,18
அதிர்ஷ்ட கிழமை:- செவ்வாய்
அதிர்ஷ்ட நிறம்:- இளஞ்சிவப்பு
அதிர்ஷ்ட தெய்வம்:- முருகன்
அதிர்ஷ்ட திசை:- தெற்கு
அதிர்ஷ்ட கல்:- பவளம்

பரிகாரம்:- உங்கள் ராசிக்கு 26.05.2005க்கு பிறகு அர்த்தாஷ்டமச்சனி தொடங்குவதால் சனிபகவானுக்கு சனிக்கிழமைகளில் எள் முடிந்த எண்ணெய் விளக்கு ஏற்றி எள் சாதம் நைவேத்தியம் செய்து தானம் அளிப்பதன் மூலம் கெடுதிகள் விலகும். 28.09.2005 முடிய குரு பகவான் 6ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஏழை வயோதிபர்களுக்கு உங்களால் முடிந்த பொருள் உதவியோ ஆடை தானமோ வழங்குவதுடன் குரு, தட்சிணாமூர்த்தியை வியாழக்கிழமைகளில் தரிசிப்பது உத்தமம்.

(தொடரும்)

# ஈராக்கில் 4 வெவ்வேறு வெடிகுண்டுத் தாக்குதல்

# அமெரிக்க இராணுவ வாகனங்கள் அழிப்பு



(பக்தாத்)
ஈராக் தலைநகர் பக்தாத்தில் நான்கு இடங்களில் நடாத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டன.

ஈராக்கில் தீவிரவாதிகள் தொடர்ந்து வெடிகுண்டுத் தாககுதல் நடத்திவருகின்றனர். பக்தாத்தில் நேற்றுமுன்தினம் நான்கு இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அமெரிக்க இராணுவ வாகனங்கள் சென்ற போது கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டதில் நான்கு பேர் காயமடைந்தனர். அமெரிக்க இராணுவ வாகனங்கள் சேதமடைந்தன. அல்-அமரியா அமைப்பே இத்தாககுதலை நடத்தியது.

பக்தாத் சர்வதேச விமான நிலையம் அருகேயும் அமைச்சர்கள் வசிக்கும பகுதியிலும் வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடத தப்பட்டுள்ளன. (ற)

## கொலை முயற்சி அம்பலம்

(பீஜீங்)

கடந்த 1955 ஆம் ஆண்டு சீனப் பிரதமர் சூயென் லாயை கொலை செய்ய நடந்த சதி தற்போது அம்பலமாகியுள்ளது.

1955ஆம் ஆண்டு ஹொங்ஹொங்கிலிருந்து இந்தோனேசியாவுக்குச் சென்ற விமானத்தில் தைவான் நாட்டினர் டைம் பாம் பொருத்தி வெடிக்கச் செய்தனர். இதில் 16 பேர் பலியாயினர்.

இந்த விமானத்தில் அப்போதைய சீனப் பிரதமர் சூயென் லாய் செல்வதாக இருந்தார். அவருக்கு குறிவைத்தே இந்த டைம் பாம் வைக்கப்பட்டதாக தற்போது தெரியவந்துள்ளது.

சூயென் லாய் கடைசி நேரத்தில் தனது பயணத்திட்டத்தில் மாறுதல் செய்ததால் அந்த விமானத்தில் செல்லவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ற)

WORLD NEWS
உலக தரிசனம்

# புதிய போப்புக்கு ஆடை தைப்பதில் சிக்கல்

(ரோம்)

வத்திகானில் புதிய போப்பைத் தேர்ந்தெடுக்கும் பணி அடுத்த வாரம் தொடங்கவுள்ளது. அவர் அணிந்துகொள்ளும் பிரத்யேக ஆடையை எந்த அளவுக்குத் தைப்பது என்பதுதான் டெய்லரின் இப்போதைய கேள்வி.

செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்துக்குப் பின்புறம் 'காப்ளஸ்டோன்'.தெரு உள்ளது. அங்கு சறிய டெய்லர் கடை ஒன்று உள்ளது. ஆனால், பரம்பரை பரம்பரையாகப் போப்புக்கு ஆடையைத் தைத்துக்கொடுப்பவர்கள் அந்தக் கடை உரிமையாளர்கள்தான்.



இப்போது ஐந்தாவது தலைமுறையாக டெய்லர் பணியை பிலிப்போ காமரெல்லி என்பவர் தொடர்கிறார். இவரது முன்னோர்கள் தான், முந்தைய போப்கள் ஐந்து பேருக்கும் ஆடைகளைத் தைத்துக்கொடுத்துள்ளனர். இப்போது புதிய போப்புக்கு ஆடை தைக்கும் பணி இவரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

பிலிப்போவுக்கு போப் உடையை எந்த அளவுக்குத் தைப்பது என்பதுதான் இப்போது சிக்கல். புதிய போப்பாக யார் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது தெரியாது. அவர் உருவ அமைப்பு எப்படி இருககும் என்பதும் தெரியாது. இந்தச் சிக்கலுக்கு டெயிலர் பிலிப்போ வேறு விதமாக முடிவும் கண்டிருக்கிறார்.

இதுகுறித்து டெய்லர் பிலிப்போ கூறியதாவது,

எதிர்வரும் திங்கட்கிழமை புதிய போப்பைத் தேர்ந்தெடுக்கும் பணி தொடங்குகிறது. அதற்கு முன் அவர் அணியக்கூடிய ஆடை தயாராக இருக்கவேண்டும். தேர்தலில் யாராவது தேர்ந்தெடுக்கப்பட்டால் புதிய போப்புக்குரிய பிரத்யேக ஆடையை அணிந்து கொணடு அவர் செயின்ட் பீட்டர்ஸ் பால்கனியில் வந்து தோன்றுவார். அப்போதுதான் இந்த உலகத்துக்கு புதிய போப் யார் என்பது தெரியும். அதற்கு முன் அவர் உருவ அமைப்பு தெரியாது.

எனவே, மூன்று விதமான அளவுகளில் ஆடைகள் தைத்துள்ளேன். சிறியது, நடுத்தரம், பெரியது என்ற அளவுக்கு புதிய போப்புக்கான ஆடைகளைத் தைத்து வத்திகானுக்கு கொடுத்திருக்கிறோம். புதிய போப் உருவத்துக்கு ஏற்றதான ஆடையை அணிந்து கொள்ள வசதியாக அப்படித் தைத்திருக்கிறோம். அதிலும் திருத்தங்கள் இருந்தால், கன்னியாஸ்திரிகள் தற்காலிகமாக சில மாறறங்களைச் செய்வர். போப் தேர்ந்தெடுக்கப்பட்ட மறுநாள் மீண்டும் நாங்கள் செயின்ட் பட்டர்ஸ் சதுக்கத்துக்குச் சென்று ஆடையை சாியான அளவுக்குத் தைத்துக் கொடுப்போம் இவ்வாறு பிலிப்போ கூறினார். (ற)

# சங்கரராமன் கொலை வழக்கு செங்கல்பட்டு நீதிமன்றுக்கு மாற்றம்

சங்கரராமன் கொலை வழக்கு செங்கல்பட்டு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி, இளைய மடாதிபதி விஜயேந்திர சரஸ்வதி, காஞ்சி மட மேலாளர் சுந்தரேச ஐயர், வஜயேந்திரரின் தம்பி ரகு, கூலிப்படைத் தலைவன் அப்பு உள்ளிட்ட குற்றம் சாட்டப்பட்டுள்ள 24 பேரும் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று நீதபதி உத்தமராஜ் உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், ஜெயேந்திர சரஸ்வதி நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை. விஜயேந்திர சரஸவதி உட்பட மற்ற 23 பேரும் காஞ்சி நீதிமன்றத்தில் ஆஜராயினர். ஜெயேந்திரரின் சார்பாக தாங்கள் ஆஜராவதாக அவருடைய வழக்கறிஞர்கள் தியாகராஜனும், சண்முகமும் விண்ணப்பித்ததை நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் படுகொலை செய்யப்பட்ட வழககு காஞ்சி நீதமன்றத்திலிருந்து செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்படுவதாகவும், எதிர்வரும் 27ஆம் திகதி குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் தவறாமல் ஆஜராக வேண்டும் என்றும் நீதிபதி உத்தரமராஜ் உத்தரவிட்டார்.

சங்கரராமன் வழக்கை எந்த நீதிமன்றத்தில் விசாரிப்பது என்பதனை செங்கல்பட்டு அமர்வு நீதிமன்ற நீதிபதி அக்பர் அலி முடிவு செய்வார்.

அநேகமாக காஞ்சி விரைவு நீதிமன்றத்திலேயே இவ்வழக்கு விசாரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# ஆயுதக் கொள்வனவில் ரூ.2000 கோடி ஊழல் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது நடவடிக்கை

தே.ஜ.கூட்டணி ஆட்சியின்போது இராணுவத்துக்கு ஆயுதம் வாங்கியதில் ரூ.2000 கோடி ஊழல் நடந்துள்ளது. அது தொடர்பாக ஜோர்ஜ் பெர்னாண்டஸ மீது நடவடிக்கை எடுக்கவிருப்பதாக சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு மனு தாக்கல் செய்து உள்ளது.

மத்தியில் தே.ஜ.கூட்டணி ஆட்சியின் போது இராணுவ அமைச்சராக ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இருந்தார். அப்போது இராணுவத்துக்கு ஆயுதங்கள் வாங்கியதிலும் கார்கில் போரில் இறந்த இந்திய வீரர்களுககு சவப்பெட்டி வாங்கியதிலும் ஊழல் நடந்ததாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் ஒரு பொதுநல வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. மத்திய அரசு பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்தது. அதில் இராணுவத்துக்கு ஆயுதங்கள் வாங்கியதில் விதிகள் மீறப்படவில்லை என்று தவறுதலாக குறிப்பிட்டு இருந்தது. இதைத்தொடர்ந்து ஆயுத பேரத்தில் மத்திய அரசே தனக்கு நற்சான்றிதழ் கொடுத்து வட்டது என்று பொனாண்டஸ் பறைசாற்றினார்.

உடனே இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி, மத்திய அரசு தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் தவறாக குறிப்பிட்டுவிட்டது. புதிய பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்றார். அதன்படி சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு சார்பில் இராணுவ அமைச்சக சார்பு செயலாளர் ஆர்.சதுர்வேதி சுப்ரீம் கோர்ட்டில் நேற்றுமுன்தினம் ஒரு பிரமாண பத்திரம் தாக்கல் செய்தார்.

அதில் கூறி இருப் பதாவது, இராணுவத்துககு ஆயுதம் வாங்கியதில் அதிகாரிகளும் இராணுவ அமைச்சரும் முறைகேடுகள் செய்ததாக கம்ட்ரோலர் ஆப் ஆடிட்டர் ஜெனரல் தனது அறிக்கையில் கூறியுள்ளார். குறிப்பாக கார்கில் போர் என்ற போர்வையால் ஆயுத சப்ளைக்கான விதி முறைகளை இராணுவ அமைச்சர் மாற்றி இருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



இந்த ஆயுத பேரத்தால் ரூ.2000 கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. கார்கில் போர் என்ற பெயரில் விதிகளையும் கட்டுப்பாடுகளையும் மீறி சொந்த ஆதாயத்துக்காக ஆயுதங்கள் வாங்கப்பட்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அப்போதைய இராணுவ அமைச்சர் மற்றும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு திட்டமிட்டு உள்ளது.


காம்ப்ட்ரோலர் ஆப் ஆடிட்டர் ஜெனரல் ஏற்கெனவே பரிசீலனை செயத 5 ஆயுத பேரஙகள தவிர மேலும் 20 ஆயுத பேரங்களையும் சி.பி.ஐ விசாரணைக்கு விட அரசு திட்டமிட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டு இருக்கிறது.

சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு தாக்கல் செய்த பிரமாண பத்திரம் பற்றி ஜோர்ஜ் பெர்னாணடஸ் கூறுகையில், பிரமாணபத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. எனக்கு எதிராக மத்திய அரசு சதி செய்கிறது. அதை சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என்றார். (ற)

## மன்மோகன் சிங் - முஷாரப் காண இருக்கும்

# போட்டி இரத்துச் செய்யப்படாவிடின் கோட்லா மைதானம் சிதைக்கப்படும்

## சிவசேனைக் கட்சி மிரட்டல்



இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் - பாகிஸ்தான் அதிபர் ப்ர்வேஷ் முஷாரப் ஆகியோா களுக்காக இருக்கும் போட்டிக்கான டெல்லி கிரிக்கெட் மைதானத்தைச் சிதைப்பேர்ம் என்று சிவசேனை கடசி மிரட்டல் விடுத்துள்ளது.

இந்தியா- பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே கடைசி ஒருநாள் போட்டி டெல்லியில் உள்ள பெலோஸ்ஷா கோட்லா மைதானத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்,இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் குடன் ஒனறாக அமர்ந்து இந்தக் கடைசிப் போட்டியைக் காண டெல்லி செல்ல இருககிறார்கள்.


இந்நிலையில், பாகிஸ்தான் அணி இந்தியாவில் ஆட எதிர்ப்புத் தெரிவித்து வரும் சிவசேனை அமைப்பினர் 1999ம் ஆண்டு செய்தது போல பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தைச் சிதைப்போம் என்று எச் சரித்து உள்ளனர்.

இதுபற்றி டெல்லி மாநில சிவசேனைத் தலைவர் பகவான் கோயல் கூறியதாவது:-

இந்தியாவில் பயங்கரவாதத்தை தூண்டி வரும் பாகிஸ்தானை இந்தியாவில் கிரிக்கெட ஆட அனுமதிக்கமாட்டோம். பாகிஸ்தான் தொடர்நது இந்திய எதிர்ப்புக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகிறது. முஷாரப் கிரிக்கெட் பார்ப்பதற்காக மட்டுமே இந்தியாவுக்கு வரவில்லை. காஷ்மீர் பற்றி பேச வருகிறார்.

எனவே, அந்த நாட்டு அணியை டெல்லியில் விளையாட விடமாட்டோம். நாங்கள் கிரிக் கெட்டுககு எதிரானவர்கள் அல்ல. ஆனால் பாகிஸ்தானின தீவிரவாத செயல்களுக்கு எதிரானவர்கள்.

டெல்லி போட்டியை ரத்துச் செய்ய இப்போது கூட போதுமான கால அவகாசம் இருககிறது. போட்டியை இரத்துச் செய்யத் தவறினால் எந்த ஒரு நிலைமைக்கும் சிவ சேனையினர் இறங்கி வி டுவர்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ற)



தஞ்சை மண்டல தி.மு.க மாநாட்டு பந்தலின் அழகிய உட்புற தோற்றத்தைப் படத்தில் காணலாம்.

## இன்று ஒரு தகவல்

### மனித நேயம்

சார்! நமது உடலை நாம் நல்ல விதமாக வைத்திருக்க வேண்டும் என்று தான் எல்லோரும் ஆசைப்படுகிறோம். சரி! இதற்கு என்னவழி? என்று கேட்டால் விபரம் தெரிந்தவர்கள் மூன்று வழியைச் சொல்கின்றனர். அதாவது நல்ல உணவு தேவையான தேகப்பயிற்சி கவலைப் படாமல் இருப்பது இந்த மூன்றும் தான் அதற்குவழியாம் இந்த மூன்றிலும் நாம் கொஞ்சம் கவனம் செலுத்த ஆரம்பித்தால் எந்த நோயும் நம்மிடம் நெருங்க முடியாது என்று பெரிய டாக்டர்கள் கூறுகின்றனர்.

இது வரைக்கும் சரி! அவர்கள் கூறுவதும் ஒரு விதத்தில நியாயமாகத் தெரிந்தது இப்போது நான்காவதாக ஒரு விடயத்தையும் அவற்றோடு சேர்த்திருக்கின்றனர் அது தான் கொஞ்சம் வேடிக்கையாக இருக்கிறது என்ன தெரியுமா அது? மனித நேயம் மற்றவர்களை நேசியுங்கள் அடிக்கடி மற்றவர்களுக்கு உதவி புரியுங்கள் அது உங்கள் உடல் நலனுக்கு நல்லது என்கின்றனர்.

அடுத்தவர்களை நேசிப்பதற்கும் நமது உடல் நிலை நன்றாக இருப்பதற்கும் என்ன தொடர்பு? கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் இருக்கும் மருத்துவத் துறைப் பேராசிரியர் இதற்கு விளக்கம் கொடுக்கிறார் அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? பொதுவாக மற்றவர்களுக்கு நாம் உதவி செய்யும்போது அல்லது மற்றவர்களை நேசிக்கும் போது நாம் மகிழ்வாக இருக்கிறோம் அந்த சமயத்தில் நமது உடலில் இருக்க கூடிய நோயை எதிர்க்கும் தன்மை கொண்ட செல்கள் அதாவது முழு சக்தியுடன் இயங்குகின்றன.

அப்படி அவை இயங்கும் போது நமது உடலில் நோய எதுவும் வருவதில்லை என்கிறார். அவர் ஆனால் அதே சமயம் நாம் கவலையுடன் இருக்கும் போதே நோய் தடுப்பு செல்கள் உடலில் குறைவாகவே உள்ளன. என்றும் இப்போது கண்டுபிடித்திருக்கின்றனர் அதனால் இபபடிப்பட்டவர்களுக்கு பிணிகள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது என்கிறார் அந்த டாக்டர்.

இது சம்பந்தமாக சான் பிரான்சிஸ்கோவில் ஒரு ஆராய்ச்சியே நடத்திப் பார்த்திருக்கின்றனர் எப்படி தெரியுமா? குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனியாக வாழ்ந்து கொண்டிருக்கும் முதியோர் பலரைத் தேடிக் கண்டு பிடித்தனர் அந்தப் பெரியவர்களுக்கெல்லாம் உடலில் என்னென்ன நோய்கள் உள்ளன என்று விபரமாகக் குறித்து வைத்துக் கொண்டனர்.

அவர்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரே இடத்தில் தங்கவைத்தார்கள் அவர்களை மூன்று பிரிவாகப் பிரித்தனர். ஒவ்வொரு பிரிவுக்கும் மற்றவர்களுக்கு உதவி செய்வது போன்ற பொறுப்புக்களைக் கொடுத்தார்கள் உதாரணமாக ஒரு பிரிவுக்கு சிறைச்சலைக்குச் சென்று உபதேசம் செய்யும் வேலை இன்னொரு பிரிவுக்கு சின்

## விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது அத்தியாவசிய தேவையாகும்

### -டிலான் பெரேரா

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது ஒரு அத்தியாவசிய தேவையாகும். ... இவ்வாறு பிரதிஅமைச்சர் டிலான் பெரேரா பி.பி.சியின சந்தேசிய சிங்கள சேவைக்கு வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 60 சதவீத மானவை தமிழ்ப் பகுதிகளே. நாம் விரும்பினாலும், வரும்பாவிட்டாலும் இதுவே உண்மை. புனர்வாழ்வு நடவடிக கைகளை நாம் முன்னெடுக்கும் போது யதார்த்தத்தைப புறக்கணித்து விட முடியாது எனத் தெரிவித்தார்.

அவர் கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில், பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பியினர் எதிர்ப்பதில் அர்த்தமொன்றுமில்லை. ஏனெனில் வடக்கு-கிழக்கிற்கு அதிகாரத்தைப் பரவலாக்குவதைத் தாம் ஆதரிக்கப் போவதாக ஜே.வி.பி ஏற்கனவே தெரிவித்திருக்கின்றது. பொதுக்கட்டமைப்பு எபதும் ஒரு நிர்வாகக் கட்டமைப்புத் தான்.பிரதான ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சி விடுதலைப்புலிகளுடன் கூட்டாகப் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே சம்மதத்தைத் தெரிவித்து விட்டது.

சமஷ்டி ஆட்சிமுறைக்கு மக்கள் ஆதரவு கிடையாது என்று ஜே.வி.பியின் தலைமை தெரிவித்திருப்பது பற்றி கருத்துக் கூறிய பிரதியமைச்சர், பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கடசி, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ என்பன சமஷ்டிக்கு ஆதரவு தெரிவித்திருப்பதால எதிர்ப்பவர்கள் சிறுபான்மையோரே என்றார்.

சமஷ்டிக்கு மொத்தம் 70 சதவீத எம்.பிக்களின் ஆதரவு உண்டு. கடந்த வாரம் அனுராதபுரத்தில் பேசிய ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இதுதொடர்பில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டால் 20சதவீத மக்களே சமஷ்டியை ஆதரிப்பர் என்று தெரிவித்த கருத்து தப்புக் கணக்கு என்றார். (ரு-6)

## சமாதான முயற்சி குறித்து மக்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரசாரம்

(கொழும்பு)

சமாதான முயற்சி குறித்து மக்களுக்கு அறிவூட்டும் பிரசார நடவடிக்கைகளைத் தனியே ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் பணிப்பிற்கமைய இப்பிரச்சார நடவடிக்கைகள் எதிர்வரும் 23ஆம் திகதி உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி மாளிகை வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடைக்கால நிர்வாக யோசனை உட்பட சமாதான முயற்சிகளுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்கள் பற்றியும் மக்களுக்கு விரிவாக அறிவூட்டப்படவுள்ளதுடன் இது சம்பந்தமான விடயங்களை செயற்படுத்துவதற்காக ஜனாதிபதியினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

டிலான் பெரேரா, மஹிந்தானந்த அளுத்கமகே, ரிபீ. ஏக்கநாயக்க ஆகிய பிரதியமைச்சர்கள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

சமாதான நடவடிக்கைகள் குறித்து பிரச்சாரம் செய்யும் அமைப்பின் தலைமைப் பதவி பேராசிரியர் காமினி கீரவெல்லயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாளாவிய ரீதியில் கூட்டங்களை நடத்துவது மற்றும் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பிரச்சாரங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வீதிச் சிறுவர்கள் எண்ணிக்கை

### பாரிய பிரச்சினைகளை உருவாக்குமென பொது அமைப்புகளின் எச்சரிக்கை

(வவுனியா)

வவுனியாவில் அண்மைக்காலமாக வீதிச் சிறுவர்களின் எண்ணிக்கையும், வீதிச் சிறுவர் தொழிலாளர்

சிறுவர் தொழிலாளர்களாகவும் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய சிறுவர்கள் வீதிகளில் இரும்புத்துண்டுகள்

என்றும் இப்போது கண்டுபிடித்திருக்கின்றனர் அதனால் இபபடிப்பட்டவர்களுக்கு பிணிகள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது என்கிறார் அந்த டாக்டர்.

இது சம்பந்தமாக சான் பிரான்சிஸ்கோவில் ஒரு ஆராய்ச்சியே நடத்திப் பார்த்திருக்கின்றனர் எப்படி தெரியுமா? குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனியாக வாழ்ந்து கொண்டிருக்கும் முதியோர் பலரைத் தேடிக் கண்டு பிடித்தனர் அந்தப் பெரியவர்களுக்கெல்லாம் உடலில் என்னென்ன நோய்கள் உள்ளன என்று விபரமாகக் குறித்து வைத்துக் கொண்டனர்.

அவர்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரே இடத்தில் தங்கவைத்தார்கள் அவர்களை மூன்று பிரிவாகப் பிரித்தனர். ஒவ்வொரு பிரிவுக்கும் மற்றவர்களுக்கு உதவி செய்வது போன்ற பொறுப்புக்களைக் கொடுத்தார்கள் உதாரணமாக ஒரு பிரிவுக்கு சிறைச்சலைக்குச் சென்று உபதேசம் செய்யும் வேலை இன்னொரு பிரிவுக்கு சின்னப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் வேலை இது போன்ற பொறுப்புக்களைக் கொடுத்த பின்பு அந்த தாத்தாக்கள் எல்லாம் ஓய்வின்றி வேலை செய்ய ஆரம்பித்துவிட்டார்களாம்

ஆறுமாதம் கழித்து அவர்களின் உடல் நிலையை பரிசோதித்துப் பார்த்தபோது நோயின் தன்மை பலருக்கு மிகவும் குறைந்திருப்பது தெரியவந்ததாம். மற்றவர்களுக்கு உதவுவதென்பது ஒரு விதமான மனித நேயம் நமது ஊர் ஆன்மிகவாதிகள் அடுத்தவர்களுக்கு உதவும் படி கூறினால் நாம் விவாதம் செய்ய ஆரம்பிக்கிறோம். இப்போது விஞ்ஞானிகளே சொல்வதனால் வேறு வழியில்லாமல் கேட்டுக்கொள்கிறோம் இந்தக் காலததில் எதுவாக இருந்தாலும் ஒரு நிருபணம் தேவைப் படுகிறது அது தான் கஸ்ட்ம்.

அது இருக்கட்டும் இப்போதெல்லாம் நாம் எந்தளவிற்கு மற்றவர்களுக்கு உதவியாக இருக்கிறோம் என்பதற்கு ஒரு கதையை கேட்கலாமா?

ஒரு பஸ் போய்க்கெண்டிருந்தது. ஒரு பெரியவர் ஒரு மூட்டை மீது உட்கார்ந்திருந்தார். மிகவும் நெருக்கடியான இடம் நின்று கொண்டு பயணிப்பவர்களுக்கு மிகவும் இடைஞ்சலாக இருந்தது அது. நடத்துனர் கத்தி கத்திப்பார்த்தார். அந்த ஆள் அசையவே இல்லை சந்தை மூட்டை மீதே உட்கார்ந்திருந்தார்.ஒரு இடத்தில் பஸ் நின்றது. நடத்துனர் மிகவும் கோபத்துடன் போய் அந்த மூட்டையைதள்ளிவிட்டார் வெளியே. அப்போதும் அந்த ஆசாமி அவசரவில்லை கவலைப்படவில்லை "என்ன சார் இது ! உங்களுக்குக் கோபமே வரவில்லையா?" என்று கேட்டார். பக்கத்தில் இருந்தவர் அதற்கு அந்த ஆள "நான் எதறகாகக் கவலைப்படவேண்டும் ? அந்த மூட்டை என்னனுடையதில்லையே" என்றார்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வீதிச் சிறுவர்கள் எண்ணிக்கை

## பாரிய பிரச்சினைகளை உருவாக்குமென பொது அமைப்புகளின் எச்சரிக்கை

(வவுனியா)

வவுனியாவில் அண்மைக்காலமாக வீதிச் சிறுவர்களின் எண்ணிக்கையும், வீதிச் சிறுவர் தொழிலாளர் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதாக பொது அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

இந்த சிறுவர்கள் இத்தகைய நடவடிக்கைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு கல்வியில் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவருமென பொது அமைப்புகள் கவலை தெரிவிக்கின்றன.

போர் காரணமாக இடம் பெயர்ந்து தொடர்ந்தும் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் சிறுவர்களில் சிலரே இவ்வாறு அதிகளவில் வீதி சிறுவர்களாகவும் சிறுவர் தொழிலாளர்களாகவும் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய சிறுவர்கள் வீதிகளில் இரும்புத்துண்டுகள் போத்தல்கள் முதலியவற்றைச் சேர்ப்பது, நடைபாதை வியாபாரம், அப்பிள் வியாபாரம், கடையில் எடுபிடி வேலை போன்றவற்றில் பெருமளவில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

அவ்வாறான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருபவர்களுக்கு போதியளவு சம்பளம் வழங்கப்படுவதில்லையெனவும் அவர்களுக்கான எதிர்காலத் திட்டமெதுவும் இல்லையெனவும் தெரிகிறது.

குடுமபக்கஷ்டம் காரணமாகவே தாம் இவ்வாறான வேலைகளைச செய்வதாக அச் சிறுவர்கள் தெரிவிக்கின்றன.

சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவது தொழிலாளர் சட்டத்திற்கு விரோதமானது என்பதால் இத் தொழிலில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்களது வயதை 18 என்று கூறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அச்சிறுவர்கள் தெரிவிக்கின்றனர். (து-9)

# பட்டதாரிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

பட்டதாரிகள் 90 பேரை பொலிஸ் சேவையில் இணைத்துக கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இவர்களுக்கு பொலிஸ் பயிற்சி கல்லூரிகளில் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் சாதாரண கடமைகளுக்கு மேலதிகமாக பொதுமக்களுக்கான சேவைகள் ஆலோசனைகள் உட்பட பல்வேறு பிரிவுகளின் கீழ் இவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே பொலிஸ்மா அதிபர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

தோட்டப் பகுதி மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயும் பொருட்டு பொலிஸ்மா அதிபர் நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

தோட்ட மக்களினால் செய்யப்படும் முறைப்பாடுகளை உடனடியாக விசாரணை செய்து அவ்வப் போதே அவற்றை தீர்த்து வைக்கவேண்டும் என பொலிஸ் நிலைகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு பொலிஸ்மா அதிபர்.ஆலோசனை வழங்கியுள்ளார். (க-9)

# பாதிப்புற்ற பாடசாலைகளின் சேதவிபரங்கள் சேகரிப்பு

(கொழும்பு)

சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான விபரங்களை கல்வியமைச்சின் புள்ளி விபரப் பிரிவு சேகரித்து வருகின்றது.

அனர்த்தங்களினால் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சாரா பணியாளர்கள ஆகியோருக்கு உதவும் நோக்கத்துடன் இநத சேத விபரங்கள் நாடளாவிய ரீதியில் சேகரிக கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பீ.டயஸ் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தங்களினால் நாட்டின் கரையோர பிரதேச பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள மனித மற்றும் பௌதீக வளப் பாதிப்புக்கள் தொடர்பான விபரங்களை திரட்டும் வகையில் தற்போது பாடசாலை அதிபருக்கு தரவு சேகரிப்பு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

தேசிய ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடவடிக்கைக்கு பாடசாலை அதிபர்கள் அனைவரும பூரண ஒத்துழைப்புகளை வழங்குமாறு கல்வியமைச்சின் புள்ளி விபரக்கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.(க).

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும் - குறள்

வலம்புரி

## இளைஞர்களின் போக்கில் கண்காணிப்புத் தேவை

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என பண்டிதமணி கணபதிப்பிள்ளை கூறிக் கொள்வார். கந்தபுராணக் கலாசாரம் என்றால் என்ன? என்பதற்குப் போதிய வரைவிலக்கணம் கூறப்படவில்லையாயினும் கந்தபுராணபடனம், பயன், விரத அனுஷ்டிப்பு, பக்திமார்க்கம் என்ற நோக்கில் கந்தபுராண கலாசாரம் என்பதனை உள்ளார்ந்தமாக புரிந்துகொள்ள முடியும்.

எனினும் கந்தபுராணக் கலாசாரம் பற்றிய விளக்கம் தற்போது தேவையில்லாமல் போகுமளவிற்கு யாழ்ப்பாணக் கலாசாரம் மிகமோசமாக மாற்றமடைந்துள்ளது.

இதிலும் குறிப்பாக இளைஞர்களின் நடை உடை பாவனையில் தென்படும் புரள்வின் மூலம் எதிர்காலம் எப்படியாகும் என்பதை கணித்துக் கொள்ள முடிகிறது. தென்னிந்திய திரைப்படங்களில் வருகின்ற விரசமான நிகழ்வுகளை அப்படியே பின்பற்றுகின்ற முறைமை இளைஞர்களிடம் ஏற்பட்டிருப்பதை நாம் அவதானிக்க முடிகிறது.

சினிமா படங்களில் காட்சிப்படுத்தப்படும் ஆடை[illegible], தலைவெட்டுக்க்ள், பாலியல் பலாத்காரங்கள், காதல்லீலைகள், கடத்தல்கள் என்பனவற்றினை அப்படியே கொப்பிசெய்துகொண்டு நிஜ வாழ்கையையும் சினிமாவாக மாற்றிக்கொள்ளும் இளைஞர்களின் போக்கு அறியாமையின் வெளிப்பாடா? அல்லது சினிம்ாப் படங்களின் ஊடுருவித் தாக்கும் திறனா என்பது ஆய்வுக்குரிய விடயம்.

சினிமாப் படங்களை பார்க்கின்ற இளைஞர்கள் தாமும் நடிகர்களாக எண்ணுவது உளம்சார்ந்த ஒரு விடயமாயினும் நடிகர்களின் கோலத்தை ஆடுகின்றபோது அதுபற்றி தான்சார்ந்த சமூகத்தின் கணிப்பு என்னவாக இருக்கும் என்பதை சிந்திப்பதில் இருந்து் இளைஞர்கள் விலகிக்கொள்வது வேடிக்கையாகவே இருக்கிறது.

விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இந்த மண்ணில் ஒருபகுதி இளைஞர்கள் தங்கள் தோள் களில் ஆயுதங்களை சுமந்திருக்க இன்னொரு சாரர் வீதிகளில் மதுபோதையில் அட்டகாசம் புரிவது, விரசமான சேட்டைகளில் ஈடுபடுவது வேதனைக்குரியதாகும்.

இந்த மண்ணின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்த 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களால் ஈழத்தமிழ் இளைஞர்கள் பற்றிய கணிப்பு உலக நாடுகளில் உயர்வாகவே இருக்கின்றது.

இதனை பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொரு இளைஞர்களினதும் தலையாய கடமையாகும்.

ஆனால் அதனை நாம்செய்கின்றோமா என்றால் அதற்கான விடை இல்லைஎன்பதாகவே இருக்கும்.

நவீன தகவல்தொழிநுட்ப உலகில் வாழ்கின்ற நாம் உலகின் தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றி சற்றும் சிந்திப்பதாக இல்லை. தமிழகத்தில் இருந்து வெளிவரும் சினிமாப் படங்களை அப்படியே பின்பற்றிக்கொள்ளும் யாழ்ப்பாண இளைஞர்கள் தமிழகத்தின் கணனியியல் முன்னேற்றம் குறித்து கண்டு கொள்வதில்லை உலகில் கணனியியலில் சென்னை மாநகர் முதன்மை நிலையில் இருக்கின்றதென்ற செய்தியை யாழ்ப்பாண இளைஞர்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

தமிழகத்தில் தமிழ் இளைஞர்கள் தகவல் தொழில் நுட்பத்தில் அபாரமான சாதனை படைக்கின்றார்கள் எனில் நம்மால் மட்டும் ஏன் முடியாது?

இந்த உணர்வை நம்முள் ஏற்படுத்தவேண்டுமாயின் இளைஞர் சமூகம் சினிமா மோகத்திலிருந்து விடுபடவேண்டும். அதேநேரம் தமது பிள்ளைகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கடமையை பெற்றோர்களும் செய்தாக வேண்டும்.

# சமாதானத்தை ஏற்படுத்த இருதரப்பும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்

## -பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

**தடைப்பட்டு தேக்க நிலையிலுள்ள அரசுக்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டு நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு கூட்டமைப்பு அரசாங்கம் நிதானமாகவும் மதிநுட்பத்துடனும் செயற்பட்டு வருகின்றது எனத் தெரிவித்துள்ளார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க .**

பொரளை மில்லேபே சனசமூக நிலையத்தை நேற்று முன் தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இதய சுத்தியுடன் செயற்படுகின்றது, செயற்பட்டு வருகின்றது.

ஆனால் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் அரசுக்கு எதிரானவர்களும் சமாதானம் என்று கூறிக் கொண்டு கூட்டமைப்பு அரசாங்கம் காலத்தைக் கடத்தி அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தை இழுத்தடிப்பதாக கூக்குரலிடுகின்றார்கள. இது ஒரு பிரசார நடவடிக்கை. அது எப்படியிருப்பினும் அரசாங்கம் சமாதானத்தை அடைவதற்கு நிதானமாகச் செயற்படும்.

அத்துடன், புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகசபை சுனாமிக்குப் பின்னரான வடக்கு-கிழக்குப் புனரமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் போன்றவற்றுக்கு சில விட்டுககொடுப்புகளைச் செய்ய வேண்டும்.

புலிகளின் கோரிக்கைகளிலிருந்து சில நகர்வுகளை, முடிவுகளை எடுப்பது கடினமானதொரு விடயமாகும். அவர்களும் சில விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். என் றாலும் அரசு தொடர்ந்தும் இதய சுத்தியுடன் செயற்படும். தமிழீழ விடுதலைப்புலிகளும் முன்னைய ரணில் அரசாங்கமும் செய்து கொண்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன் படிக் கையை மாற்றவோ இரத்துச் செய்யவோ முடியாது. அவ் வாறான ஒரு நடவடிக்கை மீண்டும் ஒரு யுத்தத்திற்கே இட்டுச்செல்லும. இதனை அரசு மட்டுமல்ல புலிகளும் எதிர்க் கட்சியும் உணரும்.ஆகவே அரசாங்கம் நிதானமாகச் செயற் படுவது அவசியமாகும். அவ்வாறு செயற்படுவதே அரசுக்கு நல்லதொரு விடயமாகும்..

சில சில சம்பவங்கள் யுத்த நிறுத்தத்துக்குக் கெடுதியான சூழலை உருவாக்கினாலும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வது அரசு- புலிகள் இருதரப்பினரதும் பொறுப்பாகும்.

இந்தப் பொறுப்பிலிருந்து ஒருதரப்பும் விலகிச் செல்வது உசிதமானதன்று. அவ்வாறு ஒரு தரப்பாவது விலகிச் செல்வதானது மீண்டுமொரு யுத்தத்துக்கே வழிவகுக்கும்.

ஆனால் புலிகளைப் பற்றி எமக்குத் தெரியாது. அரசாங்கம் மோதல் தவிர்ப்பில் உறுதியுடன் இருந்து சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு நிதானத்துடன் செயற்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார். (ஐ-8)

# தோப்பூர் இராணுவ முகாம் மீது நாம் மோட்டார் தாக்குதலை நடத்தவில்லை

## எழிலன் க.கா. குழுவுக்கு தெரிவிப்பு

(திருகோணமலை)

எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் வழமையான மோட்டார் தாக்குதல் பயிற்சி இடம்பெற்றது. ஆனால் எந்த மோட்டார் யல்லும் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் விழவில்லை.



இதை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள் எம்மிடம் உளளன. போர் நிறுத்தக் கண்காணிபபுக குழுவுக்குத் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தோப்பூர் இராணுவக் காவ லரண் மீது மோட்டார் தாக்குதலை விடுதலைப்புலிகள் மேற் கொண்டனர் எனப் படையினர் தெரிவித்த முறைப்பாடு குறித்து கண்காணிப்புக் குழுவினர் எழிலனிடம் விசாரித்தனர்.

எழிலன் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்த விளக்கம் வருமாறு,

எமது கட்டுப்பாட்டுப் பகுதியான பள்ளிக்குடியிருப்பில் எமது போராளிகள் வழமையான மோட்டார் தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் பயிற்சியின் போது ஏவப்பட்ட யல்கள் யாவும் எமது பகுதிகளுக்குள்ளேயே வீழ்ந்தன. அவை வீழ்ந்த இடங்கள் தொடர்பான விவரங்கள் எம்மிடம் உள்ளன.

எந்தவொரு யல்லும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விழவில்லை. அதை உறுதியாகக் கூறமுடியும்.

படையினர் குறிப்பிட்டுள்ள ரக மோட்டார்களை நாம் பயிற் சியில் பயன்படுத்தவில்லை. எமது மோட்டாரின் ரகம் வேறு. எம்மீது வீண்பழி போடுவதற்காகத் தேவையற்ற வீண் பிரசாரங்களைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர் என்று ள்ளது.

# மின்கட்டணம் உயரும் அபாயம்

(கொழும்பு)

மின் உற்பத்திக்கு எரிபொருள் பயன்படுத்துவதனை கட்டுப் படுத்தத் தவறினால் மின்கட்டணத்தை 48வீதமாக அதிகரிக்க வேண்டியேற்படும் என இலங்கை மின்சாரசபை அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

தற்போது ஒட்டுமொத்த மின் உற்பத்தியில் 65 வீதமான உற்பத்தி எரிபொருளைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்படுகிறது டீசலின் விலை அதிகரித்துச் செல்வதனால் அதனால் ஏற்படும் செலவை மின்சாரசபையினால் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக இலங்கை மின்சாரசபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மின் உற்பத்திக்கான மாற்றுவழிகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தாததினால் இப்பிரச்சினை மேலும் மோசமடைந்துளளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் இலங்கை மின்சாரசபையைக் கொண்டு நடத்த வேண்டுமாயின் மின் கட்டணத்தை 48வீதம் அதிகரிக்க வேண்டும் என மின்சாரசபை அதிகாரிகள் மின்சக்தி அமைச்சிறகு அறிவித்துள்ளதாகவும் அப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (க)

# கரும் புகை கக்கும் வாகனங்களை தடைசெய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

போக்குவரத்திலீடுபடும் வாகனங்களில் கரும் புகை கக்கும வாகனங்களை தடைசெய்வது குறித்து பரிசீலித்து வருவதாக சுற்றாடல் இயற்கைவள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

அடுத்தவருட ஆரம்பம் முதல் மேற்படி வாகனங்களுக்கான தடை அமுலுக்கு வரும் என்று அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் 18 இலட்சத்திற்கு மேற்பட்ட வாகனங்கள் இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படடுள்ளன.

அவவாறு பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் 75 சதவீதத்துக்கும் அதிகமானவை கரும் புகை கக்கும் வாகனங்களாகும்.

எனவே இதனால் சூழல் மாசுபடுவதுடன் மக்களுக்கு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.

வாகனங்களிலிருந்து வெளியேறும் கரும் புகையினால் புற்றுநோய் அபாயம் உள்ளது.

எனவேதான் கரும்புகை கக்கும் வாகனங்களை அடுத்த வருடம் முதல் தடைசெய்ய உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதுதொடர்பான கண்காணிப்புகளை மேற்கொள்ள இரு நிறுவனங்கள் நிறுவப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

அறுதி உண்மையான பரம்பொருளை அடைய வேண்டுமானால் முதலில் ஒளியை அடைந்தாக வேண்டும். அதற்கு வாழ்க்கையையே வழியாக ஈசாவாஸ்ய உபநிடதம் சொல்கிறது. வாழ்க்கையிலிருந்து விலகி ஓடாமல் வாழ வேண்டிய முறையை அறிந்து அதன்படி வாழ்ந்தால் அதுவே ஓர் ஆன்மிகச் சாதனையாகி விடுகிறது. ஒளியை அடைவதற்கான இறையனுபூதிக்கான ஒரு வழியாகிவிடுகிறது.

சுவாமி விவேகானந்தர்

# கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சினால் நோயாளிகளும் சிதறி ஓட்டம்

## அம்பாறை மகா ஓயாவில் சம்பவம்

அம்பாறை மகாஓயா பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று முன்தினமிரவு ஆர்ப்பாட்டம் நடத்திய பொது மக்கள் மீது பொலிசார் கண்ணீர்ப்புகை அடித்து தடியடிப் பிரயோகமும மேற்கொண்டு அவர்களை கலைத்தனர்.

இச்சம்பவத்தையடுத்து அப்பிரதேசத்தில் நள்ளிரவு வரை பதற்ற நிலை காணப்பட்டது. பொலிசாருககு தண்ணீர் எடுத்துச் செல்லும் பவுசர் வண்டி 12வயதுச் சிறுவன் ஒருவன் மீதுமோதியதையடுத்து அச் சிறுவன் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டான்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் உரிய நேரத்தில் சம்பவம் இடத்திற்குச் சென்று விசாரணை செய்யாததையடுத்து ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு கற்களை வீசி பொலிசாருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இச்சம்பவத்தின் போது பொது மக்களை கலைக்க பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அருகிலுள்ள மருத்துவமனையிலிருந்த நோயாளிகளும் அங்கிருந்து சிதறி ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய பவுசர் சாரதி பொலிஸ்சார்ஜன்ட் என்றும் இவர் மதுபோதையில் வாகனத்தை செலுத்திச் சென்றுள்ளார் என்றும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (த)

# புதிய திரைப்படங்கள் வெளியீடு நேற்று ஏற்படுத்திய சர்ச்சைகள்

(சென்னை)

புதுவருடப் பிறப்புத்தினமான நேற்று திரைக்கு வந்த தென்னிந்தியத் திரைப்படங்களான சந்திரமுகி மற்றும் மும்பை எக்ஸ்பிரஸ் ஆகியவை வெளியிடப்பட்ட திரையரங்குகளில் ரசிகர்களிடையே வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

ரஜினிகாந்தின் நடிப்பில் உருவான சந்திரமுகி படம் வெளியான திரையரங்கில் நேற்று அதிகாலை முதல் ரஜனி ரசிகர்கள் கூடினர். இதனால் நெரிசல் உருவானதும் பொலிஸார் அதனைக் கட்டுப்படுத்த முயன்றனர். இதனால் மோதல்கள் உருவானது.

பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கும் ரசிகர்களுக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்டது. பொலிஸார் மீது கல்வீச்சுத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் காயமடைந்தார்.

இதேவேளை மும்பை எக்ஸ்பிரஸ் திரையிடப்பட்ட திரையரங்குகளுக்கு நேற்று முன்தினம் இரவு முதல் பலத்த பொலிஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தது.

செங்குன்றத்தில் உள்ள அம்பிகா திரையரங்கில் மும்பை எக்ஸ்பிரஸ் படம் திரையிடப்படுவதால் திரையரங்கு முன்பு நள்ளிரவில் அலங்கார வேலைகள் நடந்து வந்தன.

இந்த நிலையில் மும்பை எக்ஸ்பிரஸ் படத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் யாரோ மர்ம மனிதர்கள் சிலர் திரையரங்கின் பின்பக்க காம்பவுண்ட் சுவர் வழியாக ஏறிக் குதித்து திரையரங்கினுள் சென்று திரையரங்கின் திரையை கத்தியால் கிழித்து சேதப்படுத்திவிட்டு ஓடிவிட்டனர்.

நேற்றுக் காலை திரையரங்கை சுத்தம் செய்யப் புறப்பட்ட ஊழியர்கள் திரைகிழிக்கப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். இது பற்றி முன பக்கம் காவலுக்கு இருந்த பொலிஸாரிடம் திரையரங்கு மனேஜர்தியா. ராஜன் புகார் செய்தார்.

பொலிஸார் திரையரங்கிற்கு சென்று மர்ம மனிதர்கள் யாராவது பதுங்கியிருக்கின்றார்களா எனத் தேடிப்பார்த்தனர்.

ஆனால் யாரும் சிக்கவில்லை. பின்பக்க வழியாக தப்பிச் சென்றது தெரியவந்தது. (ச)

# மரண அறிவித்தல்

## ஏகாம்பரம் ஆறுமுகம்

## ஜனாதிபதி நாடு...

தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினர் புலிகளின் பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் பல்வேறுநாடுகளின் அரசுத்தலைவர்களுக்கும் விளக்கி வருகின்றனர். இந்தநிலையில் பொதுக்கட்டமைப்புத்தொடர்பான பிந்திய தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியல் விவகாரக்குழுவினர் நாடுதிரும்பியதும் பொதுக்கட்டமைப்புத்தொடர்பான மும்முரமானபணிகளில் ஈடுபடுவார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நோர்வேயின் ஊடாக பொதுக் கட்டமைப்பு பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகளுடன் நாமும் இணைந்து செயற்படவுள்ளோம் அதற்கு விடுதலைப்புலிகளின் ஆதரவினை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

பொதுமக்கட்டமைப்பினை அடிப்படையாக வைத்தே சமாதானப் பேச்சுவார்த்தையினை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என நம்பிக்கை வெளியிட்டார். (த-04)

## அவசரகால...

நிவாரணப் பணிகள் அனைத்தையும் சாதாரண சட்டத்தின் கீழ் செய்யமுடியும். சாதாரண சட்டத்தின் கீழ் செய்யமுடியாதவற்றை எமக்குக் காட்டுங்கள். செய்யமுடியாதவை அவ்வாறு ஒன்றுமில்லை. அவற்றை சரியாக மேற்கொள்வதற்கு அவசரகாலச் சட்டம் தேவையில்லை.

இந்த நாட்டில் அவசரகாலச் சட்டம் தவறான வழியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் அவசரகாலச் சட்டம் நல்ல செயற்பாடுகளை விடவும் தீய செயற்பாடுகளுக்கு கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

அவசரகாலச் சட்டம் அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்தப்

## வதிவிடப்பாசறை

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு திருமறைக்கலாமன்றம் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் வதிவிடப்பாசறை ஒன்றை நடத்தவுள்ளது.

கொழும்புத்துறை சென்ஜோசப் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப்பாசறை நிகழ்வில் 100 சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுக்கு மகிழ்வூட்டும் நிகழ்வுகள்,அரங்க விளையாட்டுக்கள் படைப்பாக்க முயற்சி நம்பிக்கையை வளர்த்தல் போன்ற செயற்பாடுகள் இடம் பெறவுள்ளன. (க-51)

## பட்டதாரி...

நிறைவுசெய்த மாணவர்கள் இதற்குவிண்ணப்பிக்க முடியுமென கலைப்பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

பட்டச்சான்றிதழ் இல்லாத போதும் பதிவாளரினால் வழங்கப்படும் பட்ட விபரச்சான்றிதழைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க முடியும் என பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறப்புக் கலைப் பெறு பேறுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வெளியிடப்படும் எனவும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன் தெரிவித்தார்.

மேற்படி ஆசிரியர் வெற்றிடத்திற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 15 ஆம் திகதி என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## எதிர்க்கட்சி தலைவர் தங்காலை விஜயம்

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் மக்களையும் பார்வையிடுவதற்காக எதிர்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க நேற்று தங்காலைக்கு விஜயம் செய்தார் சுனாமியால் பாதிக்கப்பட்டு தங்காலை சிறுவர் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலயத்திற்குச் சென்று ரணில் விக்கிரமசிங்கா அங்கு சிற்றுண்டிகளை வழங்கினார்.

பின்னர் அங்கிருந்து குடா விகாரைக்குச் சென்ற அவர், சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். (ச-8)

## அடுத்த மாத...

மழைபெய்யும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

"சுனாமி" புவியதிர்வுகளினால் இயற்கை அமைப்புக்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இது காலநிலையிலும் மாற்றங்களை ஏற்படுத்துமெனவும் எதிர்வு கூறப் படுகிறது. (த-08)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
கமலஹாசன், மனிஷா கொய்ராலா, நாசர் நடிப்பில்

மும்பை X பிரஸ்
பு.நே:10.30 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்யலாம்

குளிரூட்டப்பட்ட நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
9.30, 2.30 6.30, 9.30 (பு.நே)
தாவடி மைந்தன் ஜெய்ஆகாஷ், பிரணதி நடிப்பில்

குருதேவா
2 ஆவது வெற்றி வாரம்

நிறைஞ்சனாஸ் சங்கானை
காலை 11 மணி,பி.ப 2.45 மணிக்கு
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த ஏய்
விசேட காட்சியாக மாலை 6, 9 மணிக்கு
தனுஷ், ஸ்ரீதேவி நடித்த தேவதையைக் கண்டேன்

மனோகரா யாழ்ப்பாணம்
புத்தாண்டு வெளியீடாக
இளைய தளபதி
விஜய், ஹரிணி, பிபிசாபாசு, வடிவேலு நடித்த

சச்சின்
கா.நே 9.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்யாலாம்

நாளை ஆரம்பம்

தெரியவந்தது.

# மரண அறிவித்தல்

# ஏகாம்பரம் ஆறுமுகம்

புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல 69 B.A தம்பிலேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும்கொண்ட ஏகாம்பரம் ஆறுமுகம் (12-04-2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் - நாகமுத்து தம்ப
திகளின் அன்பு மகனும் இராமநாதர் - தெய்வானைப்பிள்ளை தம்பதி
களின் அன்பு மருமகனும், சின்னம்மாவின் பாசமிகு கணவரும் சிவ
யோகம் (சுவிஸ்), நமநாதன் (சுவிஸ்), கமலாதேவி, காலஞ்சென்ற
வர்களான மகேஸ்வரி, ஜெயராணி மற்றும் தனபாலசிங்கம் (லண்
டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், லோகநாதன் (சுவிஸ்), கன
கேஸ்வரி (சுவிஸ்) தேவராசன், சுந்தரராஜா (கிராம உத் தியோகத்
தர்) நாவாந்துறை சோனகத்தெரு தெற்கு, ஜெகதீஸ்வரி (லண்டன்)
ஆகியோரின் அன்புமாமனும், காலம்சென்றவர்களான கதிரவேலு
பொன்னம்மா, சிதம்பரம், அன்னம்மா, சிவக்கொழுந்து மற்றும் தங்
கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலம்சென்றவர்களான
விசுவலிங்கம், முத்தையா, நாகம்மா மற்றும் அன்னம்மீா, மகாலிங்கம்
(கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சஞ்ஜீவன் (சுவிஸ்),
சந்துரு (சுவிஸ்), பௌஷா (சுவிஸ்), லக்ஷன் (யா. இந்து ஆரம்ப
பாடசாலை), றஜீவன் (NIIT) றஜீவ்தா (யாழ். வேம்படி மகளிர் உயர்
தர் பாடசாலை), சங்கீர்த்தனா (யா. இந்து ஆரம்ப பாடசாலை),
பிரவீனா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (15.04.2005) வெள்ளிக்
கிழமை பி.ப 4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூத
உடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மனல் இந்து மயானத்
திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்
பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்,
நா. சுந்தரராஜா.
(மருமகன்)
(கிராம உத்தியோகத்தர்)

69. B.A தம்பிலேன்,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

(9452)

இந்த நாட்டில் அவசரகாலச் சட்டம் தவறான வழியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் அவசரகாலச் சட்டம் நல்ல செயற்பாடுகளை விடவும் தீய செயற்பாடுகளுக்கு கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

அவசரகாலச் சட்டம் அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்தப் படாதா? என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் அவசரகாலச் சட்டம் எமக்கும் நாட்டிற்கும் தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (08)

---

## காயமடைந்த...

குறைந்தளவிலானோரே அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார். இவர்களில் 70 பேர் வைத்தியசாலை வாட்டுக்களில் தங்கி சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

பாதை விபத்துக்களிலேயே அதிகமானோர் காயமடைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். இதே வேளை தமிழ்ச் சிங்கள புது வருடத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவோர் விபத்துக்கள் ஏற்படாத வகையில் போட்டிகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த வருடங்களில் அதிகளவான விபத்துக்கள் இப் போட்டிகளினாலே ஏற்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(த)


**SPOKEN ENGLISH**

ஓய்வுபெற்ற உத்தியோகத்தரால் வீடுகளுக்கு வந்து சுலபமான முறையில் விரைவாக ஆங்கிலம் பேசக் கற்றுக்கொடுக்கப்படும். தொடர்பு: இல. 6, மாவத்தை ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். T.P: 021 - 4591001






நாளை ஆரம்பம்

**A/L 2007**

**(கலை, வர்த்தகப் பிரிவுகள்)**

**காலை - 9 மணி**

கணக்கீடு - D.SAM
வணிகக்கல்வி - பசில்
பொருளியல் - இராஜேஸ்வரன்
ஆங்கிலம் - சுதர்சன்
பொது வினா - தவசேகர்
இந்துநாகரிகம் - ஜோதீஸ்வரன்
தமிழ் - மீரா
அளவையியல் - மோகன்
கிறிஸ்தவம் - மல்லிகா
புவியியல் - இக்னேசியஸ்
நாடகம் - சந்திரன்

**DMI**
யாழ்.நகர்

**பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை**

பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை. சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் (யாழ். நகரமையத்திலிருந்து 6. கி.மீ. தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும்) 18-04-2005 திங்கட்கிழமை காலை 10மணிக்கு நேரில் வரவும்.

**ஆளணி முகாமையாளர், வலம்புரி**



இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.